
# மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

செப்டெம்பர், 1971



கஸ்தூரி

40 சதம்

கலை, இலக்கிய மாத இதழ்

விஜயம் செய்யுங்கள் !

* பாடசாலைப் புத்தகங்கள்
* நூல்நிலையப் புத்தகங்கள்
* பாடசாலை உபகரணங்கள்

மற்றும் பாடசாலைத் தேவைகளுக்கு

**கலைவாணி புத்தக நிலையம்**

10, மெயின் வீதி,
**யாழ்ப்பாணம்.**
Phone: 221

130, D. S. சேனநாயக்கா வீதி,
(திருகோணமலை வீதி,)
**கண்டி.**
Phone: 7196

Grams: "KALAIVANI"

**பிறிமியர் கபே பிறிமியர் பேக்கறி**

சிறந்த உணவு வகைகளை வழங்குவதில்
வடபகுதியில் முன்னணியில் விளங்கும்
ஒரு நூற்றாண்டு அனுபவம் வாய்ந்த நிறுவனங்கள் !

**சுவைமிக்க பற்றிஸ்,**
**கேக் வகைகள், பாண்,**
**ஐஸ் வகைகள், சிற்றுண்டி,**

முதலியவைகளுக்கு இவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

விருந்துகளுக்கு உணவு வழங்குவதிலும்
கைதேர்ந்தவர்கள்.

**பிரதானவீதி, :—: யாழ்ப்பாணம்.**

அட்டைப் பதிப்பு, யாழ். கூட்டுறவு அச்சகம்.

"ஆடுதல் பாடுதல் சித்திரம்-கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்"

# மல்லிகை


கொடி 7 மலர் 40

செப்டெம்பர் – 1971


இந்த
இலக்கிய மல்லிகை
இதழ் வண்ணங்கள்
இலங்கை எழுத்தாளன்
இதய எண்ணங்கள்.

அட்டைப் படம்
பிரேம்ஜி


அலுவலகம்:
60, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (இலங்கை)



மணக்கும் மல்லிகை
கதை பெயர்
கட்டுரை கருத்து
எல்லாம்
ஆக்கியோர் தனித்துவம்.
அவரே பொறுப்பு.


## கௌரவம்

எஜமானி
கௌரவத்தை நிலைநாட்ட
வேலைக்காரனைக்
காரின் பின் ஸீட்டில்
உட்கார்த்தி வைத்து
சாரத்தியம் செய்கின்றாள்.
பார்க்கப் போனால்
அதனால்
அவனது தகுதியல்லவா
உயர்ந்து விடுகின்றது!

## தண்டனை

பஸ்ஸுக்குள்
புகைப்பது குற்றம்
சட்டம் சொல்லுகின்றது
காரணம் சுகாதாரக்கேடு
பஸ்ஸே புகைத்து
ஊரைக் கெடுக்கின்றதே
தண்டனை யாருக்கு?

திலீபன்



பாரதி விழா எட்டயபுரத்தில் இம் மாதம் 13 - 14 -ந் திகதிகளில் இரண்டு நாட்களும் மிகக் கோலாகலமாக நடைபெற இருக்கின்றது. விழா அமைப்பாளர்கள் இரண்டு நாள் விழாவிலும் பங்கு பற்றிக் கருத்துரை வழங்குமாறு உத்தியோக பூர்வமாக என்னை அழைத்திருந்தனர்.

அழைப்பு அண்மையில் தான் எனக்குக் கிடைத்தது. தகுந்த ஏற்பாடுகள் செய்து புறப்பட முடியாத சூழ்நிலை எனக்கு. தவிரவும் எங்கள் மதிப்புக்குரிய எம். ஸி. அவர்களுக்குப் பொதுமக்கள் கார் அன்பளிப்புச் செய்கின்றனர். அது முக்கியம். பின்னர் 19-ந் திகதி மாத்தளையில் இலக்கிய விழா. அடுத்து கொழும்பில் 25-ந் திகதி சர்வ தேச எழுத்தாளர் தினக் கூட்டம். அத்துடன் மல்லிகை இம் மாத இதழ் வெளிவர ஆவன செய்யவேண்டும். இத்தனை நிகழ்ச்சி நிரல்களுக்கும் மத்தியில் அரசியல் தேவை காரணமாக நான் யாழ்ப்பாணத்தில் இம் மாத முற்கட்டத்தில் அவசியம் நிற்கவேண்டிய கட்டாயம் இருந்தது.

எனவே, விசா, வெளிச் செல்லும் உத்தரவு வாங்குவதிலும் கால தாமதம். எனது வருகை தடைப்பட்டதை விளக்கி அழைப்பாளர்களுக்கு தந்தி மாத்திரம்தான் என்னால் கொடுக்க முடிந்தது.

எனது வருகையைப் பத்திரிகைச் செய்தி மூலம் அறிந்து கொண்ட இலக்கிய நண்பர்களிற் பலர் என்மீதும் குறிப்பாக மல்லிகை மேலும் கொண்ட பேரன்பினால் தங்கள் தங்கள் ஊர்களுக்கும் வரச்சொல்லிக் கடிதங்கள் மூலம் கேட்டுள்ளனர். முக்கியமாக, திருச்சி, தூத்துக்குடி, தஞ்சாவூர் சேலம் மதுரை போன்ற இடங்களில் இருந்து எனது வருகையை விசாரித்து எழுதியுள்ளனர். — மகிழ்ச்சிதான்! ஆனால்?...

இவர்களில் ஒரு பகுதியினரான 'இராஜபாளையம் இலக்கிய வாசகர் குழு'வைச் சேர்ந்த நண்பர்கள் தி.க.சி.யின் முன்னுரையுடன் 'காலம் மாறுமா?' என்ற பெயருடன் சிறுகதைத் தொகுப்பொன்றை வெளியிட இருப்பதாகவும் அவ் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைக்குமாறும் கேட்டிருந்தனர்.

அபிமானம் வைத்து அழைத்துள்ள நல்லிதயங்களுக்கு ஏமாற்றம்தான். இந்த அழைப்பு தனிப்பட்ட எனக்கல்ல என்பதும் புரியாததொன்றல்ல.

கூடிய விரைவில் ஈழத்து இலக்கியக் குரல்கள் தமிழ் நாட்டில் பரவலாக ஒலிக்கத்தான் போகின்றன!

டொமினிக் ஜீவா

மல்லிகை

# பட்டமளிப்பும்

# படித்த புதுச் சாதியும்

சமீபத்தில் தமிழ் நாடு முதலமைச்சருக்கு அண்ணாமலைச் சர்வகலாசாலை கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியதையிட்டு எதிர்ப்புத் தெரிவிப்பதில் தம்மைப் படித்த சாதியினர் என எண்ணிக் கொண்டுள்ள தலை கொழுத்த கூட்டமொன்று பல வழிகளிலும் முயன்று வருகின்றது.

அரசியல், பொருளாதார, சமுதாய, இலக்கியக் கருத்துக்களில் பல கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, பொதுமக்களுக்காக உழைத்து வருபவர்களைக் கௌரவிப்பதென்பது தேவையானது: மிக முக்கியமானது. வருங்காலத் தலைமுறை பொதுப் பணியில் ஈடுபட்டு உழைக்க இந்தக் கௌரவங்களும் மரியாதைகளும் உதவும் என்பதே நமது கருத்து.

இலங்கையிலும் இப்படியான கௌரவப் பட்டங்களைப் பல்கலைக் கழகங்கள் வழங்கி வந்துள்ளதை நாம் அவதானித்திருக்கலாம். அரசியல் மாத்திரமல்ல, மொழி, இலக்கியத் துறையில் சேவை செய்பவர்களுக்கும் இந்தக் கௌரவங்களை நமது சர்வகலாசாலைகள் கொடுத்துத் தம்மைத் தாமே கௌரவித்துக் கொண்டன.

இதற்கு மாறாக தம்மைப் படித்தவர்கள் என எண்ணிக் கொண்டுள்ள புதுச் சாதிக் கூட்டமொன்று இப்படியான கௌரவப் பட்டங்கள் வழங்குவதை எதிர்த்துப் பிலாக்கணம் வைத்துப் புலம்பத் தொடங்கியுள்ளது.

நான்கு கோடி மக்கள் தமிழ் நாட்டை ஆளும் பொறுப்பை சிறிது காலத்திற்கு முன்னர் ஒப்படைத்துள்ளனர் இவரிடம். நாட்டு மக்களின் பெரும்பான்மையோரின் உரிமை பெற்று ஆட்சிப் பொறுப்பேற்ற இவருக்கு ஒரு கௌரவ டாக்டர் பட்டத்திற்குத் தகுதியே இல்லையாம்!— எவ்வளவு விசித்திரம்.

திரு. உ. வே. சாமிநாதையருக்கு டாக்டர் பட்டம் வழங்கியதையும் திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு டாக்டர் பட்டம் வழங்கியதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இவர்களுக்கு முணுமுணுக்காத இந்த படித்த உயர் சாதிக் கூட்டம் தமிழ் நாடு முதல்வருக்கு டாக்டர் பட்டம் வழங்கியதில் மாத்திரம் முணுமுணுப்பதற்குக் காரணம் என்ன?

இங்கேதான் சூட்சுமம் இருக்கிறது!

'திருவாரூரில் பீடித் துண்டு பொறுக்கித் திரிந்த கருணாநிதிக்கு என்ன டாக்டர் பட்டம் வேண்டியிருக்கின்றது?' எனப் பச்சையாக — கொச்சையாகப் பேசும் பெரும் மனிதர்களின் கருத்துக்குப் பின்னுல் இந்தப் புதுச் சாதிக் கூட்டத்தின் கருத்து மறைந்திருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை ஞாபகப் படுத்த விரும்புகின்ருேம். உலக சரித்திரத்தின் தலைவிதியையே மாற்றி அமைத்தவர்கள் பாமரப் பொதுமக்களும், அவர்களினது தலைவர்களும் தான் என்பதுதான் அது!

அதற்காக உயர் கல்வியே தேவையில்லை என்பதல்ல நமது வாதம். கல்வி உயர உயர பண்பும் மக்களைப் புரிந்து சேவை செய்யும் மனப்பான்மையும் வளரவேண்டும்மே தவிர, தாம் ஒரு புதுச் சாதி என்ற அகங்காரத்துடன் நடந்து கொண்டால், தேசங்களின் தலைவிதியை மாற்றியமைக்கும் பாமர மனிதர்கள் இவர்களினது தலைவிதியையும் மாற்றி விடுவார்கள் என்பதையும் இந்த இவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்ருேம்.

கம்பன், பாரதி, ஷேக்ஸ்பியர், டால்ஸ்டாய், கார்க்கி, தாகூர் சார்லி சாப்ளின் போகட்டும் நமது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எந்தச் சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் வாங்கினுர்கள் என்பதை இந்தப் புதுச் சாதிக் கூட்டம் கூற முடியுமா?

இவர்களினது ஆற்றலைப் பற்றி இந்தக் கூட்டத்திற்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் கூறட்டுமே! இவர்களை விட இந்தப் படித்தவர்கள் என மமதை கொண்ட திருக் கூட்டம் என்னத்தைச் சாதித்துக் கிழித்துவிட்டது?

தொடர்ந்து இந்தப் புதுச் சாதிக் கூட்டம் இதைப் புரிந்து கொள்ளத் தவறினுல், அறிவுத் துறை அனைத்துக்கும் ஏகபோக குத்தகை எடுத்துள்ளவர்கள் என எண்ணினுல் முடிவில் மக்களிடமிருந்தே தனிமைப் படும் அபாயவழியில்தான் போய் முடிவார்கள்.

இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் துறைப் பகுதியினரைப் பார்த்து இந்தச் சந்தர்ப்பத்தில் ஆலோசனை ஒன்றையும் கூறிவைக்கலாம் என எண்ணுகின்ருேம்.

தமிழ் மொழிக்காகக் காலாதி காலமாகப் பாடுபட்டு வரும் தமிழ் மூதறிஞர்கள் நம்மிடையே இருக்கிருர்கள் — பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை—இவர்களுக்கு கௌரவ இலக்கிய டாக்டர் பட்டம் வழங்கினுல் என்ன?

நமது பல்கலைக் கழகத்தின் பெருமை இதனுல் சிதைந்து விடுமா, என்ன?

தவறினுல் பட்டப்படிப்புப் படித்தவர்கள் என அகம்பாவம் கொண்ட ஒரு புதுச் சாதிக் கூட்டம் தமிழை மெல்ல மெல்ல விழுங்கிவிடும்! ★

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைச் சரியான திசைவழியில் வளர்க்க முற்பட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக விளங்கியவர் பிரேம்ஜி.

மிக்க கனம் வாய்ந்த கட்டுரைகளை எழுதும் வல்லமை படைத்தவர். இவரது பணியே தனித்தன்மை வாய்ந்தது.

இயக்க இயல் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாகப் போராடி வருபவர்.

பிரேம்ஜியின் புகைப்படத்தை அட்டையில் வெளியிடுவதில் மல்லிகை பெருமகிழ்ச்சியடைகின்றது.

— *ஆசிரியர்*

# முதன் முதலாய்  சந்தித்தேன்

பெரி. சண்முகநாதன்

**நா**ன் தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டாவதாண்டுப் பரீட்சை எழுதித் தோற்றுப்போன மனச் சோர்வுடன் இருந்தபோதுதான் வேலைக்கு வரும்படி அந்த அழைப்பு வந்தது. எனக்கு வேலை செய்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தமோ, நெருக்கடியோ இல்லாதிருந்த போதிலும், எனது மனச் சோர்வினைப் பறக்கடிப்பதற்கு ஏதாவதொன்றில் 'மூழ்கி' விடவேண்டும் என்ற ஒரு தவிப்பு இருந்தது. அதனால் அந்த வேலைக்குப் போகச் சித்தமானேன்.

அந்த அயல்நாட்டுத் தூதரக வளவினுள் அச்சத்துடன் அடியெடுத்து வைத்தேன். 'மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்த' அந்நாட்டின் தூதரகத்தினுள் நுழையும்போது அந்த நாட்டு மண்ணில் காலெடுத்து வைப்பதுபோற ஒரு இனிய மயக்கம் என்னை ஆட்கொண்டிருந்தது. 'நீ அங்கே பிரேம்ஜி முத

லாஞேருடன் வேலை செய்ய வேண்டும்' என்று முன்னர் நெருங்கிய நண்பர் ஒருவர் சொல்லக் கேட்டிருந்தேன்' பிரேம்ஜி என்ற பெயரைக் கேட்டதும் சற்றுத் திகைத்துப்போய் விட்டேன். 'அந்த மனிதரும் இங்குதாஞ இருக்கின்ருர்?' என்று வியந்து கொண்டேன்.

பிரேம்ஜி என்ற பெயரைப் பத்திரிகைகளில் நான் அடிக்கடி பார்க்காவிட்டாலும், அடிக்கடி கேள்விப்பட்டிருக்கின்றேன். முற்போக்கு எழுத்தாளர்சங்கத்தின் தோற்றம் முதற் கொண்டு, எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தின் உருவாக்கம் உள்ளிட்டு ஈழத்து இலக்கிய உலகில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் அவர் வகித்த பாத்திரம் குறித்து அறிந்திருந்தேன். 'புதுமை இலக்கியம்' இதழில் அவரது கனமான சில கட்டுரைகளைப் படித்திருந்தேன். 'தேசாபிமானி' யில் அவரது கனல் பறக்கும் அரசியல் விமர்சனங்களைப் படித்து ஒருவித உத்வேகம் பெற்றிருந்தேன். இவையெல்லாம் சேர்ந்து பிரேம்ஜி பற்றிய ஒரு 'இராட்சத உருவினை என் மனதுள் எழுப்பியிருந்தன.

நான் அவர் முன்ஞல்போய் உட்கார்ந்தபோது மும்முரமாய் ஏதோ எழுதித் தள்ளிக்கொண்டிருந்தார். கலைந்த கேசம்; பரந்த நெற்றி, சதுர பிரேம் கண்ணுடி...... களையான முகம் 'பெரிய மனுஷ' இயல்பிருந்தது அவர்தோற்றத்தில். கணீரென்ற குரலில் அவர் பேசிஞர். அவர் குரலில் ததும்பிய வாஞ்சையும், பரிவும் என் பயத்தைப் பறக்கடித்துவிட்டன. ஒரு சில நிமிஷங்களில் பலநாள் பழகிய தோழராகி விட்டார் அவர்!...

இதுதான் எனது முதல் சந்திப்பு. இதைத் தொடர்ந்து நான் அவருடன் பணியாற்றி வந்த, வருகின்ற சில ஆண்டுகளில் பிரேம்ஜியின் ஆளுமையைப் பல கோணங்களில் தரிசித்து வந்திருக்கின்றேன்.

பிரேம்ஜி போன்ற ஒருவரின் சொந்த — தனிப்பட்ட குண விசேஷங்கள், குறைபாடுகள் ஆகியன எனக்கோ, எவருக்கோ முக்கியமில்லை. இவை எல்லாம் இவர்போன்ற ஒருவரால் மூர்த்திகரிக்கப்படும் ஒன்று திரண்ட பொதுக் கொள்கையில் கலந்து கரைந்து விடக்கூடியன. இந்த மனிதர் எதனை உருவகப்படுத்துகின்ருரோ அதுதான் முக்கியமானது.

பிரேம்ஜி சமகாலத்தின் உணர்வே உருவானவர். ஒரே ஒரு பொது நோக்கிற்குப் பொருந்தும் வகையில் அவரிடம் எல்லாம் ஒருமுனைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவரை எந்தப் புறத்திலிருந்து அணுகிஞலும் சரி, வேறு அக்கறைகளுக்கு இடமில்லாதபடி அவரை ஏறத்தாழ முழுமையாகவே ஆட்கொண்டிருக்கும் ஒரு மாட்சிமிக்க கருத்தையே எப்போதும் எதிர்ப்படுவீர்கள்.

பிரேம்ஜி ஓய்வொழிச்சலற்ற சிந்தனையாளர்; தரமான பத்திரிகையாளர்; பற்றுறுதி மிக்க கொள்கையாளர்; அடக்கமும், கனிவும், கருணையுள்ளமும் கொண்ட ஒரு மனிதர். நிதானத்தை இழக்காமல், அதே போதில் வீச்சு வழுவாமல் தர்க்கமாடுவதில் இவர் வீரர். இவரது அறிவு சித்தாந்த நுட்பம் வாய்ந்தது. ஆனுல் அறிவாராச்சியைத் தொழிலாகக் கொண்ட ஒருசில கலாநிதிகள் போல சித்

தாந்தத்தைத் தன்னிறைவு உள்ளதாக இவர் ஒருபோதும் மதித்ததில்லை. தான் விசுவசிக்கும், நேசிக்கும் உலகின் நிகழ்வுகளை அறிந்து உணர்வதற்கான சாதனமாகச் சித்தாந்தத்தைக் கருதும் இவரது இயல்பின் காரணமாகவே, பார்வைக்கு அருவத் தன்மை கொண்டவை போலத் தோன்றும் எல்லா வகை வரையறுப்புகளிலிருந்தும் போர்க் கருவியை வடித்தெடுத்து அதைக் கொண்டு எதிரிகளைத் தோற்கடிக்க இவரால் சுளுவாய் முடிகிறது. எப்பிரச்சனை குறித்தும் நிதானமான மதிப்பீட்டின் பின்னர் இவர் முன்வைக்கும் தர்க்க ரீதியான—அறிவு பூர்வமான முடிவுகள் நடப்பு பெரும்பாலும் ருஜுபித்து வந்துள்ளதை தான் பல தடவைகளில் அவதானித்திருக்கிறேன். இவரது 'தேசபக்தன் கண்ணோட்ட' விமர்சனப் பத்திக்கு ஒரு தனி மவுசு உள்ள காரணத்தை நான் இத்தருணங்களில் உணர்ந்திருக்கின்றேன்.

பிரேம்ஜி நல்ல நகைச்சுவை உணர்வு மிக்கவர். நகைச்சுவைப் பாங்குள்ள எதையும் நன்றாய் அனுபவித்துச் சிரிப்பார் மனம்விட்டுப் பலமாய்ச் சிரிப்பார். கடுமையான எதார்த்த வாதியும், சமூக துன்ப நிகழ்ச்சிகள் தவிர்க்க இயலாமையை முன்கண்டு உணரும் அசாத்தியச் சிந்தனையாற்றல் பெற்றவருமான இந்த மனிதரால் குழந்தை போல, கண்ணீர் வருமளவுக்கு, புரையேறும்படி சிரிக்க முடியும் என்பதைப் பார்க்க எனக்கு வியப்பாயிருக்கும். இவ்வாறு சிரிப்பதற்கு ஒருவர் பெரிய, வலிய உள ஆரோக்கியம் கொண்டிருக்க வேண்டும்.

முந்தா நாள் முளைத்தவர்களெல்லாம் புகைப்படமும், கலப்படமுமாய் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்து அமர்க்களம் பண்ணும் இந்நாளில், தான் விசுவசிக்கும் ஒரு உன்னத லோகப் பேரியக்கத்தின் தனிப் பெரும் அங்கமாய்—அதன் அணிதனில் ஒருவனாய் தன்னை ஆக்கிக் கொண்டு அன்று தொட்டு அதற்காய் ஊழியம் புரிந்து வரும் பிரேம்ஜிக்கு— திரைமறைவிலிருந்து எத்தனையோ அரசியல், சமூக, இலக்கியச் சாதனைகளின் நிறைவேற்றத்தில் பெரும் பங்கினை ஆற்றிவிட்டு மௌனமாய் இருக்கும் இந்த 'மர்ம மனிரு'க்கு அடக்கம் மிக மிக அதிகம்; விளம்பரம் என்றால் பெரிய பயமும், வெறுப்பும். மத்தியதர வர்க்கத்தின் மரபுவழிச் சொத்தான உள் முரண்பாடுகள், சிக்கல்கள் போன்றவை அநேக புரட்சிகர அறிவு ஜீவிகளின் வாழ்க்கைகளைத் தகர்த்துவிட்டதை — தகர்த்து வருவதை பார்த்து வந்திருக்கின்றேன். பிரேம்ஜி என்ற எளிய மனிதரின் வாழ்க்கையை எதுவும் அவ்வளவாய்ப் பாதிக்கவில்லை என்றே நான் கூறுவேன்.

பிரேம்ஜி அதிகம் எழுதுவதில்லை என்று பல இலக்கிய நண்பர்கள் மனம் உளைகின்றார்கள். அவர் நிறைய எழுதக் கூடியவர்தான். கட்டுரை இலக்கியம் அவருக்கு நன்கு கைவரக் கூடியது. ஆனால் அவரைச் சும்மா பொழுதைப் போக்கும் சோம்பேறி மனிதராய் நான் பார்த்ததில்லை. கனமான சில மனிதர்களின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமாயிருந்துவரும் பிரேம்ஜியைப் பற்றி பலர் சரியாக அறிந்திருக்காமலிருத்தல் கூடும். எத்தனையோ கடமை

களை அவர் அடக்கத்துடன் அமைதியாய் ஆற்றி வருகிறார்.

பத்திரிகைத்துறைப் பணிக்கென 1970ல் ஈழத்தில் லெனின் பரிசைப் பெற்ற மூவரில் பிரேம்ஜியும் ஒருவர். இவர் 'தேசாபிமானி' வார ஏட்டின் பிரதம ஆசிரியர்; சோவியத் நாடு' மாசிகையின் இணையாசிரியர்; இப்போது துரதிருஷ்டவசமாக இயங்காதிருக்கும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர், அமைச்சர் குமாரசூரியரின் தலைமையிலான தமிழ் விவகார ஆலோசனைச் சபையின் செயலாளர்; வடபகுதிப் பல்கலைக்கழக ஆலோசனைக் குழுவின் செயலாளர்; கலாச்சார அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள ஆபாச இலக்கியத்தடுப்புக் குழுவின் உறுப்பினர். அமைச்சரவைச் செயலாளரின் கீழ் இயங்கும் உப—குழு ஒன்றின் உறுப்பினர். இப்படி எத்தனையோ கடமைகளும், பொறுப்புகளும் இவருக்கு உண்டு.

நான் பிரேம்ஜியுடன் பணியாற்றிவந்த—வருகின்ற காலங்களில் அவரிடமிருந்து எத்தனையோ விஷயங்களைக் கற்றுக்கொண்டிருக்கின்றேன். அவருடன் எனக்கேற்பட்ட அறிமுகத்தை நான் ஒரு அதிருஷ்டமாகவே கருதுகிறேன். இந்த அறிமுகத்திற்குக் காரணமாயிருந்த அன்பிற்கினிய ஒரு தோழரை நான் மறப்பதில்லை.

## மக்கள் தொண்டனுக்கு

### கார் அன்பளிப்பு

கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக—முப்பது ஆண்டுகளாக மக்களுக்குச் சேவை செய்வதையே—குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட-மனித உரிமை மறுக்கப்பட்ட — நசுக்கப்பட்ட மக்களின் மனித சமத்துவப் போராட்டத்திற்கு ஆசானாகவும் தொண்டனாகவும் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்டு, தான் நம்பிய மகத்தான இலட்சியத்திற்காக தினசரி உழைத்துவரும் பாமர மக்களின் தலைவன் எம். ஸி. சுப்பிரமணியம் எம். பி. அவர்களுக்கு மக்களும் தமது அன்புக் காணிக்கையைச் செலுத்தத் தயாராகி, சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து, காரொன்றை 15-9-71-ல் யாழ். திறந்த வெளி அரங்கில்வைத்து அன்பளிப்புச் செய்கின்றனர்.

இந்த மக்கள் தலைவனுக்கு மக்கள் தரும் அன்பளிப்பைக் கண்டு கலைஞர்கள் பெருமை கொள்ளுகின்றனர்.

— ஆசிரியர்

முற்தொடர்




மலையாளம்:
ஸி. பி. சிவதாசன்

# மனிதனைத் தேடி

தமிழில்:
ரவீந்திரன்

---

பசியாலும் நோயாலும் வருந்தும் பொழுது நிலச்சுவான்தார்கள் சிறிதும் மனிதத்தன்மையின்றி அவர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருப்பதை கலிபோர்னியாவுக்குச் சென்றபிறகுதான் அறிகிறார்கள்.

டாமினுடைய கர்ப்பிணிச் சகோதரியான ரோஸியைக் கைவிட்டுவிட்டு அவளுடைய கணவன் ஓடிவிட்டதுதான் ஜோட் குடும்பத்திற்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. முடிவாக அவர்கள் ஒரு அரசாங்கக் கொட்டகையினை அடைந்து அங்கு தங்குகின்றனர். அங்கே அவர்களுக்குச் சற்று வசதியும் நிறைவும் கிடைக்கின்றன. அவர்களுடைய கூட்டத்தைச் சேர்ந்தவனான ஜிம்காசி இதற்கிடையில் தொழிலாளர் தலைவனாக மாறிவிடுகிறான். தொழிலாளர்களுக்குக் கொடுத்து வந்த குறைந்த கூலியைக் குறித்து வேலைநிறுத்தம் ஒன்றை உண்டாக்க, குண்டர்களான நிலச்சுவான்தார்கள் ஜிம்காசியைக் கொன்று விடுகின்றனர். அதற்குப் பதிலாக டாம்ஜோட் கொலைகாரனைக் கொன்று வஞ்சம் தீர்த்துக் கொள்கிறான். அதன் பிறகு அவனே சகல பொறுப்புக்களையும் ஏற்கவேண்டியதாகிறது.

வெள்ளப் பெருக்கு ஏற்படவே அவர்கள் தங்களுடைய இருப்பிடத்தைக் காலிசெய்துவிட்டு மேட்டுப் பகுதியை நாடிச் செல்கின்றனர். அதே சமயத்தில் ரோஸ் இறந்த குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். வைக்கோல் வேய்ந்த கூரையில் அவர்கள் பாதுகாப்பிற்கெனத் தங்க நேரிடுகிறது. அங்கு பட்டினி கிடந்து சாகப் போகிற நிலையில் உள்ள ஆண் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்துக் காப்பாற்றுவதோடு நாவல் முடிகிறது.

ஜோட்குடும்பத்தின் கதைக்குச் சிறப்பைக் கொடுப்பது அதன் பின்புலமும், முடிவும், மனதை உருக்கும் வகையில் எழுதப்பட்ட திறமும் ஆகும். அவருடைய வெற்றி வணக்கத்திற்குரியது. முதலாவது அத்தியாயத்தில் வறட்சியினுடைய தோற்றம் விவரிக்கப்படுகிறது. இறுதி அத்தியாயத்திற்குச்

சற்று முன்பாக இருபத்தொன்பதாம் அத்தியாயம் முழுவதும் கலிபோர்னியாவின் கனத்த மழையையும், வெள்ளப்பெருக்கினையும் விவரிக்கின்ருர். இவ்விரு மாபெரும் இயற்கைச் சக்திகளும் ஜோட் குடும்பத்திற்கு அளவிலாத துன்பத்தைக் கொடுத்தவைகளாகும்.

பொதுவாக அமெரிக்க மக்களுக்கு ஏற்படவிருக்கின்ற கடுமையான சோதனைகளை மனத்திற்கொண்டு, இவ்விரு சம்பவங்களின் இடையில் ஜோட் குடும்பத்தின் அனுபவங்களை படம்பிடித்துக் காட்டுவதன் மூலம் உணர்த்துகின்ற அவருடைய அசாதாரணமான திறமை அவருடைய தேசியப் பார்வையை நமக்குக் காட்டுகிறது.

'க்ரேப்ஸ் ஆஃப் ராத்தி' னுடைய நடை அந்த நாவலின் கருப்பொருளை உணர்ந்து ஆய்ந்து எழுதப்பட்ட சிந்தனையின் விளைவாகும். 1937-இல் ஸ்டீன்பெக் ஒக்லஹாமாவிற்குச் சென்று அங்கிருந்த குடியேற்ற மக்களின் கூட்டத்துடன் கலந்து வாழ்ந்து உறைந்து அதன்பிறகு கலிபோர்னியாவை நோக்கிப் பயணமானுர். அத்துடன் தமது இளமைக்காலத்தில் கூலிக்காரர்களிடமும் விவசாயிகளிடமும் கலந்து பழகிய அனுபவங்கள் இந்த இலக்கியப் படைப்பாளியின் நினைவிலிருந்து மாருமலிருந்தன. அதனுலேயே அவருடைய அனுபவங்கள் மேலும் மேலும் ஆத்ம அர்த்தமுள்ளதாக உருவாகி அவைகளுக்கு வடிவம்கொடுக்கத் தூண்டியது. நாவலில் வரும் உரையாடல்களில் விவசாயிகளுடைய கிராமப் பாணியும் அவர்கள் உபயோகிக்கும் பேச்சுவழக்கையும் அதிகமாகக் காணலாம். யதார்த்தத்தைச் சற்று அதிகமான அளவில் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவே ஸ்டீன்பெக் இம்முறையைக் கையாண்டார். இருப்பினும் நாவலை எழுதிமுடித்ததும் யதார்த்த சம்பவங்களை மட்டுமே நாவலில் கொண்டுவர நேர்ந்ததே என மனம் வருந்தினுர்.

கதாபத்திரங்களைச் சித்தரிக்கும் விதத்தில் ஸ்டீன்பெக் அதிக அளவு சிரமம் எடுத்துக் கொண்டுள்ளார் தனிமனிதத்துவ நிலையிலும், அமெரிக்க மண்ணில் வேதனைகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் மனித சமூகத்தின் பிரதிநிதியென்ற நிலையிலும் இருந்து எழுதப்பட்டுள்ள இந்த நாவலைப் படிக்கின்ற ஒவ்வொருவரும் ஜோட் குடும்பத்தின் அங்கம் என்பதை உணரமுடிகிறது. உயிருள்ள மனிதர்கள் மட்டுமல்லாது, உயிரற்ற இயந்திரங்களும் நமது மனதில் அழியாத முத்திரைகளாகப் பதிகின்றன. விவசாய முன்னேற்றத்திற்கு முன்னேடியாகவந்த டிராக்டரும் ஜோட் குடும்பம் பயணம் செய்யும் பழைய காரும் அதற்கு உதாரணங்கள். இயந்திரத்தினுல் ஏற்பட்ட பல்வேறு விதமான மாற்றங்களில் எதுவும் அதனை இயக்குபவர்களிடையே உண்டாக்கவில்லை. விவசாயத்தின் வளர்ச்சிக்குப் படிப்படியாகப் போராடிய விவசாயிகளுக்குச் சம்பவித்த துயரங்களையும், அவற்றை உண்டாக்கிய அந்தப் பிராந்தியத்தையும், டிராக்டரையும், அதனை இயக்கிப் போராடுபவனையும் இந்தப் படைப்பாளி நமக்குத் தெளிவாக விளக்குகிருர். தொடர்பற்றது போலத் தோன்றும் பலவகையான நிகழ்ச்சிச் சிதறல்கள்

நாவலின்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. நாவலின் முன்பகுதியில் கடலாமையின் பயணத்தை விரிவாக வர்ணிக்கின்றார். தீர்க்கமான முடிவுடன் பலவகையான பிரதிபந்தங்களையும் உதறிவிட்டு இந்தப் பயணத்தை மேற்கொள்ளும்' அசாதாரணத் துணிவே இப்பயணத்தின் மகத்துவம் என்று விமர்சகர்கள் பாராட்டுகின்றனர்.

ஸ்டீன்பெக்கை இளம் வயதில் மிகவும் பாதித்த புத்தகம் பைபிள், பைபிளுக்கும், 'க்ரேப்ஸ் அஃப் ராத்' நாவலுக்கும் இடையே உள்ள தொடர்புகள் மிக அதிகம் ஒக்லஹாமாவிலிருந்து ஜோட்குடும்பம் மேற்கொள்கின்ற பயணம், பைபிளில் இஸ்ரேலிய மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்டுக் கண்காணாத தேசத்திற்குச் செல்லுவதை நினைவுபடுத்துகின்றது. பைபிளுடன் சம்பந்தப்பட்ட மற்றொரு நிகழ்ச்சி டாம் ஜோடிற்கும், ஜிம்காஸிக்கும் இடையேநடக்கும் மானசிக வாக்குப் பரிவர்த்தனங்கள், தன்னல உணர்விலிருந்து மாறி ஆத்ம சமர்ப்பணம் செய்யும்பொழுது இரண்டு ஆத்மாக்களின் வடிவங்களும், பைபிளில் வருகின்ற கிறிஸ்து தரிசனத்தையும் மலைப் பிரசங்கங்களையும் நினைவுக்குக் கொண்டுவருகின்றன,

ஸ்டீன்பெக்கினுடைய நாவல்களைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது ஒன்று. அவரும், வாழ்க்கைத்தத்துவ ஆராச்சியாளருமான எட்வர்ட் ரிக்கட்சும் சேர்ந்து அளித்த ஒரு மனிதத்துவ வடிவம். சாத்திர விளக்கமென்றோ, பிறிதொன்று என்றோ தெளிவாக விளக்கமுடியாத உண்மைக் கருத்துக்கள் தத்துவச் சிந்தனையாளனின் பார்வைக்கு வெறுமையானதாகக் காட்சியளிக்குமென்றும், அவைகள் தமது நாவல்களை அணுகும் வாசகனுக்குச் சம்பந்தப்பட்டவையென்றும், பொதுவாக அவர் நம்பினார். நிகழ்ச்சிகளையும், பிறவற்றையும் காரணகாரியங்களின் தொடர்பு குறித்துச் சிந்திக்காமலும் எதற்காக இப்படியெல்லாம் என்று மறுத்துக் கூறியும் வருகின்ற தவறான பார்வையின் காரணமாக அவைகளை 'ஏன்?' 'எதற்காக' என்று நேரிடையாக அணுகமுடியாமல் போய்விடுகிறது. அதனால் 'எதனால்?' என்று கேட்க யாரும் முன்வராதிருக்கின்ற நிலையேற்பட்டு, ஒருவித பாரம் பரியமாகி சுபவாதிகளுக்கு விளங்காத மனித உறவு சம்பந்தமான விடயமாகிவிட்டதை அறிந்து, வாழ்க்கைக்கு வழிகாட்டும் படியான ஒரு அமைப்பை உருவாக்கிக் காட்ட முடியும் என்று ஸ்டீன்பெக் கருதினார். இந்த நம்பிக்கையின் அடித்தளத்தின் மீதுதான் அவருடைய புகழ்பெற்ற படைப்புக்களெல்லாம் வடிவம் பெற்றன.

ரிக்கட்சினுடைய நட்புறவின் பயனாக ஸ்டீன்பெக்கிற்குக் கிடைத்த மற்றொரு நன்மை கூட்டமைப்பு வாழ்க்கைபற்றிய உண்மை. மனிதர்களுடைய கூட்டுவாழ்க்கை பற்றிய பரிவர்த்தனைகளைக் குறித்து அவருக்கு எவ்விதச் சந்தேகமும் ஏற்படவில்லை. தனித்துவம் என்ற நிலையிலும், கூட்டமைப்பு என்ற நிலையிலும் கதாபாத்திரங்களுக்கு மிகுந்த மகத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 'சந்தேகப் போரில்' தொழிலாளத்தோழர்கள் இத்தகைய ஒரு கூட்டமைப்புக்கு வடிவம் கொடுக்கின்றனர்.

ஒரு பெரிய இயக்கத்தின் அங்கங்களாக — தூண்களாக — ஒரு பிரும்மாண்டமான உயிரின் அவயவங்களாக அவர்களை ஸ்டீன்பெக் அணுகிறார். 'க்ரேப்ஸ் ஆஃப் ராத்'—இல் கலிபோர்னியாவிற்குச் சென்று திரும்பிய குடியேற்ற மக்களிடையேயும், டோர்காஸ் பள்ளத்தாக்கில் தோட்டங்களில் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களிடையேயும் இந்த அற்புதமான உறவை தரிசனம் செய்து வைக்கிறார்.

வசதிகளும், நன்மைகளும் மலிந்துள்ள ஒரு சொர்க்கத்தை நோக்கியே எப்பொழுதும் உற்றுப்பார்க்கின்ற சுபாவம் மனித வாழ்க்கையில் வேரோடிக்கிடக்கிறதென்ற நம்பிக்கையுடையவர் ஸ்டீன்பெக். அவருடைய பல நாவல்களில் இந்த நம்பிக்கை சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது. இஸ்ரேலிய மக்கள் கண்காணாத ஒரு தேசத்தை உற்று நோக்கியபடியே செல்வதுபோல இந்தப் பார்வையும் பைபிளிலிருந்து பின்பற்றப் பட்டிருக்க வேண்டும். மற்ற நாவல்களிலும் சொர்க்கத்தைப் பற்றியுள்ள இந்த தரிசனம் இதே அளவில் இல்லையென்றாலும், வேறொரு வகையில் காணப்படுகிறது. 'முத்து' என்ற நாவலில் சற்றும் எதிர்பாராமலே நிகழ்ந்துவிட்ட ஒரு நெருங்கிய உறவின் முறிவு எப்படியெல்லாம் மனித வாழ்க்கையைத் தகர்க்கிறது எனக் காட்டுகிறார். அத்தகைய சமயங்களில் மனிதன் உற்று நோக்குவது தகர்ந்துபோன சொர்க்கத்தைத்தான். கற்பனைச் சொர்க்கத்திலிருந்து வழுக்கிவிழுந்த மனிதவர்க்கத்தினுடைய கதைதான் 'சொர்க்கத்தின் மேய்ச்சல் நிலங்கள்' என்ற நாவல். சந்தேகப் போரிலும் கூட மனித உழைப்பு மட்டுமே சொர்க்கத்தைக் காணச் சாத்தியமான வழியல்ல என்ற தத்துவ உண்மைக்கு வெளிச்சம் போடுகிறார். மனித மனதில் இயல்பாகவே உள்ள குறைகளும் குற்றங்களும் வலுவடைந்துவிட, கற்பனையில் உள்ள சொர்க்கத்தை உருவாக்க முடியாமல் திரும்புகின்ற அப்பாவி மனிதர்களைப் பற்றிய கதைதான், 'எலிகளையும் மனிதர்களையும் பற்றி' என்ற நாவல். இதனைக் கூர்ந்து பார்க்கும்பொழுது, அன்றாட வாழ்க்கையிலிருந்து உருவான — முற்றிலும் மாறுபட்ட கற்பனை உலகத்திற்கும், சாதாரண மனிதர்கள் வாழ்கின்ற யதார்த்த உலகிற்குமிடையே உள்ள வேறுபாடுகளைத்தான் ஸ்டீன்பெக்கின் நாவல்கள் எப்பொழுதுமே விளக்கிக் காட்டுகின்றன என அறியலாம்.

## குறைகளும் நிறைகளும்

சமுதாய — அரசியல் சக்திகள் பல சமயங்களில் தனிமனித்துவ வாழ்க்கையைத் தாக்கி அழிப்பதைக் காணலாம் ஸ்டீன்பெக்கின் நாவல்களில் இவை சம்பந்தப்பட்ட சம்பவங்களை மிகுந்த அளவில் காணலாம். 'சந்தேகப் போரில்' 'மாக்' என்ற தொழிலாளர் தலைவனுடைய ஆசைகளெல்லாம் தன்னலத்தின் சாயல்கள் அல்ல. அதேசமயத்தில்தான் ஒரு தனித்துவ சக்தி என்ற முனைப்பில் சமுதாயத்தில் பெரிய 'மாற்றம் எதுவும் உருவாக்க முடியவில்லை. 'எலிகளையும் மனிதர்களையும் பற்றி' என்ற நாவலிலும் தனித்துவம் அழிந்து போவதைத்தான் சித்தரிக்கிறார். 'க்ரேப்ஸ் ஆஃப் ராத்திலும் கூட ஜிம்காஹும், டாம் ஜோட்ஹும்

நாவல் முடிவடையும் தருவாயில் தனித்துவ சக்திகளின் உன்னதமான உயர்வை அடைய முடியாதவர்களாகப் போய்விடுகின்றனர். இருப்பினும் அவர்களுடைய முயற்சிகள் அவர்கள் பிரதிநிதிகளாகவிருந்த சமூகத்தில் மட்டுமில்லாமல் விட்டாலும் ஜோட் குடும்பத்தைப் பொறுத்தவரையிலாவது மாற்றத்தை உண்டுபண்ணியிருக்க வேண்டும். அதுவும் இல்லை. சமுதாயத்தினுடைய வலிமையிழந்து நசிந்துவிடுகிறது. மனிதனை நேசிக்கும் இந்த இலக்கியப் படைப்பாளியிடம் இப்படிப்பட்ட ஒரு குறையை மட்டுமே காணமுடிகிறது.

தனித்துவத்தைக் குறித்த எந்த மகத்துவமும் கொடுக்க முடியவில்லையென்றாலும் வாழ்வதற்கு வேண்டிய இச்சாசக்திகளைத் தமது எல்லாக் கதாபாத்திரங்களுக்கும் கொடுக்க ஸ்டீன்பெக்கால் இயன்றது. 'க்ரேப்ஸ் ஆஃப் ராத்தில் வரும் கடலாமை இந்த இச்சாசக்தியின் உருவகம் ஆகும். கணக்கற்ற துயரங்களை அனுபவித்தும் தகர்த்தும் பயணத்தைத் தொடர்ந்து, கலிபோர்னியாவை அடைந்து பின்பு வசதியாக வாழவேண்டுமென்ற இச்சாசக்தியுடன் ஜோட் குடும்பத்தை முன் நடத்துகிறார் ஸ்டீனபெக். இந்த இச்சாசக்தி தன்னலமற்றது என்பதற்குத் தகுந்ததும், தெளிவானதுமான ஒரு எடுத்துக்காட்டு. ரோஸ் என்ற கதாபாத்திரம் நாவலின் இறுதிப் பகுதியில் சாகவிருக்கும் சிறுவனுக்குத் தாய்ப்பால் கொடுத்துக் காப்பாற்றுகின்ற காட்சி— மனிதனுடைய விகாரமான எண்ணங்கள் மிருக வர்க்கத்தினின்றும் அதிக அளவில் வேறுபட்டதல்ல என்ற கருத்தில் உறுதியான ஈடுபாடுடையவர் ஸ்டீன்பெக். சமுதாயத்தில் நின்று நிலவிவரும் ஆசாரங்களும், சடங்குகளும் எந்த அளவுக்கு வலிவுடன் தடுத்து நிறுத்திய போதும் அவற்றைத் தகர்த்துவிட்டு வெளிக்கிளம்பும் பச்சை மனிதனுடைய கனவுகளையும், செயல்களையும் ஸ்டீன்பெக்கினுடைய கதைகளின் கருப்பொருண்மை எனக் கொள்ளலாம்.

மனித நேசத்தைப் பற்றிய விளக்கங்களில் ஈடுபடாமல் வெறுமனே பிரும்மாண்டமான அளவில் காதல் பிரச்சாரத்தில் இறங்கிவிடுபவர்களுடன் ஸ்டீன்பெக்கிற்குள்ள அதிகமான வெறுப்பினை அவருடையபடைப்புக்களில் காணலாம். இளமைக் காலத்தில் அவர் பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த பொழுது ஒரு புரோகிதனுடைய சொற்பொழிவைக் கேட்க நேர்ந்தது. 'ஆத்மா நிரந்தரமானது. இருப்பினும் சரீரத்தைப் போலவே ஆத்மாவுக்கும் தின்பண்டங்கள் அவசியமாகும்' என்ற அவரைப் பார்த்து, ஸ்டீன்பெக், 'ஆத்மா சாகாதென்றால் அதற்கெதற்கு உணவு? சாகின்ற உடலுக்கு உணவு கொடுத்தாலே போதாதா?' எனக் கேட்டதாக ஒரு கதை உண்டு.

ஸ்டீன்பெக்கைத் தாக்கி எழுதுகின்ற விமர்சகர்கள் அவரிடமே அடிக்கடி குறிப்பாகச் சுட்டிக்காட்டுவது 'அவர் ஒரு குறிப்பிட்ட சமூகப்பார்வையை மட்டுமே உடையவர்' என்பதாகும். கலிபோர்னியாவையும், அதனைச் சுற்றியும் உள்ள விவசாயிகளின் வாழ்க்கை முறைகளை மட்டுமே பின்புலமாகக் கொண்டு அவருடைய நாவல்கள் எழுதப்பட்டுள்ளன.

அவருடைய பதினேழு கதைப் படைப்புக்களில் பன்னிரண்டுக்கும் மேலானவை அந்தச் சிறிய நிலங்களில் நிகழும் சம்பவங்களை மையமாகக்கொண்டு எழுதப்பட்டவை. அவைகளில் பெரும்பாலான சம்பவங்கள் 'ஸாலினுஸ் பள்ளத்தாக்கில்' நிகழ்பவை. இந்தக் குறுகிய வட்டத்திற்குள் நின்றுகொண்டு தனதுஇலக்கியப்படைப்பு முயற்சிகளை நடத்தியபோதும், அவர் மிகவும் விரும்பி நேசிப்பது மனிதவாழ்க்கை ஒன்றுமட்டும் தான் என்பதை உணரவேண்டும். தனது சொந்த அனுபவங்களைப்பற்றி மட்டுமே எழுத வேண்டுமென்ற நிர்ப்பந்தமான உணர்விற்கு ஆட்பட்டதன் விளைவாகவே அவர் தன்னை இந்தக் குறுகிய வட்டத்திற்குள் அடக்கிக் கொண்டார். ஸ்டீன்பெக் மட்டுமல்ல, புகழ்பெற்ற மிகப் பெரிய இலக்கியப் படைப்பாளிகளும் இந்தப் பட்டியலில் அடங்குகின்றனர்.

மார்ஸல்ப்ரூஸ்ட், ஜேம்ஸ் ஜாய்ஸ், வில்லியம் ஃபாக்னர் முதலிய நாவலாசிரியர்கள் புதுமை இலக்கியத் துறையில் குறிப்பிடத் தக்கவர்களெனப் பல இலக்கிய விமர்சகர்கள் ஒருமித்த கருத்தைத் தெரிவிக்கின்றனர். ஆனால் அவர்களுடைய படைப்புக்களெதுவும் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கவில்லை. அதனால் இலக்கிய ரீதியாக உன்னதமான புகழைப் பெறவேண்டுமானால் பொது மக்களிடமிருந்து சற்று விலகியிருக்க வேண்டுமென்ற கருத்து நிலவியது. இப்பொழுதெல்லாம் விமர்சகர்களின் இயக்கம் இந்த முடிவிலிருந்து விடுபட்டுக் கொண்டு வருகிறது. ஸ்டீன்பெக் மேலும் மேலும் விமர்சகர்களுடைய கவனத்தைக் கவர்ந்து வருகிறார். இன்றைய அமெரிக்கர்களின் கனவுகளுக்கும், மனநோய்களுக்கும் வடிவம் கொடுத்துள்ள ஸ்டீன்பெக்கிற்கு இலக்கிய உலகின் வரலாற்றில் நிரந்தரமான இடம் உண்டு. ★


மல்லிகை

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

கலை இலக்கிய மாத இதழ்

60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தனித்துவம் நிரம்பிய ஈழத்து இலக்கிய பரம்பரையைக் கட்டி வளர்ப்பதுடன் நமது தேசிய பரம்பரையைப் பேணிப் பாதுகாக்க விருப்பமுள்ளவர்கள் 'மல்லிகை' யைத் தொடர்ந்து படியுங்கள்.

ஆண்டுச்சந்தா
ரூபா 6-00

சிறுகதை

நூரளை சண்முகநாதன்

# எங்கள் திருவிழா

இரவின் கருக்கள் மலை நாட்டிற்கே உரித்தான பனிக் குளிர் மயிர் கால்களையெல்லாம் சிலிர்க்க வைத்துக்கொண்டிருந்தது. முருக்கை, சவுக்கு மரங்களின் சலசலப்பு, சலசலத்தோடும் கான் தண்ணியின் சப்தம் இதைத்தவிர அமைதியாய் உறங்க ஆரம்பித்துக் கொண்டிருந்தது அந்தத் தோட்டம்.

தோட்டத்து ஸ்கூலின் முற்றத்தில் டயரைப் பற்ற வைத்து அந்த கணப்பில் குளிரை மறக்க முயன்ற தோட்டத்து இளைஞர் கூட்டம் ஏதோ முக்கியமான முடிவொன்றை எடுக்கும் நிலையில் விவாதித்துக் கொண்டிருந்தது.

அவர்களெல்லாம் தோட்டத்தில் உழைக்கும் உழைப்பாளிகள். அந்தத் தோட்டத்தின் புதிய தலைமுறைகள். கவ்வாத்துக் கத்தியை கையில் பிடித்தால் சில மணிக்குள் எத்தனையோ தேயிலைச் செடிகளை சீவி வீசி விடும் உரம் கொண்ட — வலிமை மிக்க இளைஞர்கள் அவர்கள்.

அவர்களின் இந்த விவாதத்திற்கு காரணம் அடுத்த கிழமை தோட்டத்தில் நடக்கவிருக்கும் மாரியம்மன் கோவில் திருவிழாத்தான்.

உடலை குளிர் வாட்டிக் கொண்டிருந்தாலும் அவர்களின் குரல்களில் உஷ்ணம் பொறிபறந்து கொண்டிருந்தது.

'நாம இந்த தோட்டத்திலேயே பிறந்து வளந்து வாழுறவுக...... இந்தத் தோட்டமே ஒலகமுனு இருக்கிறவுங்க. நமக்கு முன்ன நம்ம அப்பனு, பாட்டனு கட்டுனதுதான் மாரியம்மன் கோயிலு. நம்ம செலவழிச்சி கட்டி பூசசெஞ்ச கோயிலுக்குள்ள நமக்கே எடமில்லன்னு... பெறகு என்னுமயிருக்

குதா... இந்த தோட்டத்தில ஒழைக்கிறது...... கோயிலுக்கி சந்தா கட்டிறது......'

'நம்ம ராமையா சொல்லுறது முழுக்கவு நாயோ. தா.. போன வருஷ திருவிழாவுக்கு நாம எம்புட்டோ பெரிய 'பிலேன்' எல்லாம் போட்டு, மத்த மொறையவிட இந்த மொறை திருவிழாவ ரொம்ப விசேசமா நடத்த வேணுமிங்கிறதுக்காவ ராவு பகலா முழுச்சி காவடி, கரகம், நாடகம் எல்லாம் பழக கடசியிலே என்னுதுன்னு நமக்கே வெனே வைச்சுட்டானுவ... அப்பவே நாம 'அவன' ஒதைச்சிருக்கனு. அதுகா நாம செஞ்ச மொத குத்தோ......... அதுதா அவரு இந்த மொறையு முண்டுராரு.........

விவாதம் கார சாரமாக நடந்துகொண்டிருந்தது. அதன் காரம் அதிகமாக அசிங்கமான வார்த்தைகளால் கூட நீண்டு கொண்டிருந்தன.

இத்தனை பிரச்சனைக்கும் இலக்காகி இருந்தது தோட்டத்து மாரியம்மன் கோயில்.

தோட்டவாழ் மக்களின் பக்திக்கெல்லாம் அணை அந்த சிறு மாரியம்மன் கோயில்தான்.

கோயில் என்றது வான் முட்டும் கோபுரமும், மூலை விக்கிரகம், நந்தி என்றெல்லாம் கற்பனை செய்துகொண்டு கஷ்டப்படத் தேவையில்லை. ஒரு சிறு கொட்டகை அதில் ஒரே ஒரு மூலையில் மாரியம்மன் சிலை. அவ்வளவுதான் கோயில்.

சொல்லப்போனல் அந்தச் சாமியும் தோட்ட ஜனத்தைப் போல உரிமையோ செளிப்போ அற்ற ஏழைச் 'சாமி' தான்.

கோயில் இப்படி ஏழ்மை நிலையிலிருந்தாலும் வருடமொருமுறை நடைபெறும் திருவிழா மட்டும் எல்லாவற்றிற்கும் சிகரமாய் அமைந்துவிடும். தோட்டத்து ஜனங்களெல்லாம் ஒன்று சேர்ந்து தம்மாலானவற்றை சேர்த்து திருவிழாவை சிறப்புற நடத்திவிடுவார்கள். மற்றைய இடங்களைப் போல கோயிலில் அவன்—பறை—பள்ளு என்றெல்லாம் பேசும் பேச்சு அந்தக் கோயிலில் இல்லை. கோயிலில் மட்டுமல்ல அந்தத் தோட்டத்தவர்களிடையே பெரும்பாலும் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். எல்லோரும் லயத்தவர்கள். தோட்டத்தவர்கள் என்கிற ஒரே நிலை மட்டும்தான் அவர்களிடம் உண்டு.

தோட்டத்து மாரியம்மன் கோயில் திருவிழா என்றால் பிறகு தோட்டமே களைகட்டி விடும்.

திருவிழாவிற்கு மூன்று நாட்களுக்கு தோட்டத்தில் லீவு கொடுத்துவிடுவார்கள். திருவிழாவன்று தோட்டத்து துரை துரைச்சாணிக்கெல்லாம் மாலை பொட்டேல்லாம் வைத்து தப்பு தாளங்களோடு கோயிலுக்கு அழைத்து வரப்படுவார்கள். பிள்ளைகள், பெரியவர்களெல்லாம் திருவிழாவிற்கென்று புது உடுப்புக்கள்கூட எடுப்பார்கள். திருவிழாவிற்கென்று தோட்டத்தில் 'அட்வான்ஸ்' வேறு கொடுப்பார்கள். திருவிழாவிற்கென்று தோட்டத்தில்உள்ளவர்களின் மாமன், மச்சான், அக்கா, தங்கச்சிகளெல்லாம் மற்றைய தோட்டங்களில் இருந்து வந்துவிடுவார்கள்.

ஆரம்பத்தில் மரத்தடியில் இருந்த மாரியம்மனுக்கு தோட்டத்தவர்கள் முயன்று கோயில்

என்கிற பெயரில் சிறு கொட்டகைவேறு கட்டிவிட்டிருந்தார்கள். அத்தோடு கோயிலுக்கென்று நான்கு 'பெற்றோமக்ஸ்' விளக்குக்கள் 'முனியாண்டி' உபயம் 'செல்லையா' உபயம் என ஓர் சில சாமிப்படங்கள் இப்படி ஒவ்வொருமுறை திருவிழாவிற்கும் கோயிலுக்கு சுவாமிக்கென்று புதிதாக ஏதாவது ஒன்றையும் சேர்த்து விடுவார்கள்.

முன்பெல்லாம் திருவிழாவின்போது அம்மனை தூக்கிக்கொண்டுதான் லயத்தைச் சுற்றி வருவார்கள். ஆனுல் அதன்பின் டவுனுக்குச் சென்று டவுன் கோயில்களின் திருவிழாக்களை யெல்லாம் பார்த்த தோட்டப் பையன்கள், முயன்று இப்போதெல்லாம் சாமி டவுன் கோயில் வாடகை ரதத்தில்தான் வீதி வலம் வரும். அத்தோடு எஸ்டேட் பெக்டரியிலுள்ள மோட்டார் மூலம் ரதத்திற்கெல்லாம் கலர் விளக்குகளெல்லாம் போட்டு சோடனை செய்வது வழக்கமாகி விட்டது.

இவ்வளவு காலமும் தோட்டத் தொழிலாள லய, உழைப்பாள சமூகமே திருவிழாவின் முழுமையையும் செய்துவந்தது. தோட்டத்து பெரிய தனத்தில் வாழ்கிற சின்னத்துரை, பெரிய கிளாக், டீமேக்கர் எல்லாரும் இவ்விஷயங்களில் தலையிட்டுக் கொள்வதில்லை. ஏதோ திருவிழாவிற்கென்று நிதி கொடுப்பதோடு சரி. அவர்களின் அந்தப் பெரிய தரத்திற்கு 'எஸ்டேட்' கொட்டகைக் கோயில் லாயக்கில்லைதான்.

சென்ற இருவருஷங்களின் முன் எஸ்டேட்டிற்கு பெரிய கிளார்க்காக வந்தவர்தான் பொன்னம்பலத்தார். கோயிலை பெக்டரியையெல்லாம் பற்றி நன்கு அறிந்திருந்த பலர் தோட்டத்திற்குள்ளேயே இருக்கையில் எஸ்டேட் என்ருல் தேயிலைச் செடிகள் என்பதை மட்டுமே அறிந்தவர் எப்படி பெரிய கிளார்க்காக ஆனுர் என்பது இன்னும் தோட்டத்தவருக்கு கேள்விக்குறிதான். சிலர் சின்னத் துரையின் மச்சான் என்றும் சிலர் பெரிய துரைக்கு ஏதோ தூரத்துச் சொந்தமாம் அதனுல்தான் அவருக்கு வேலை கிடைத்திருக்கு என்றும் தோட்டத்தில் பேச்சுக்கள் அடிபட்டாலும், எப்படியோ 'யெவ்ஞ' வில் இருந்தவர் இப்போது பெரிய கிளார்க் ஆகிவிட்டார்.

முன்பு யாழ்ப்பாணத்தில் ஏதோ காப்பரேஷனில் வேலை பார்த்தவர் பொன்னம்பலத்தார். பங்களாவில் அவரும் அவர் மனுசியும் வேலைக்காரி மட்டும்தான். மக்கள் மகளெல்லாம் 'யெவ்ஞ' வில் போர்டிங் இருந்து படித்துக்கொண்டிருந்தார்கள்.

பொன்னம்பலத்தார் யாழ்ப்பாணத்தில் சமூகத் தொண்டர் என்று பெயரெடுத்தவர். அத்தோடு கோயில் விவகாரங்களில் சுவாமி விஷயங்களில் மிகுந்த ஈடுபாடுடையவர். அங்கு பல கோயில்களின் நிர்வாகத்தில் பங்கு கொண்டவர்.

இப்போது எஸ்டேட்டுக்கு வந்தபிறகு அவருக்கு ஒரே டல். வேலை முடிந்ததும் கட்டிலில் போய் விழுவதும், டெய்லிமிரர் ஜேம்ஸ்பொண்ட் ஆங்கில நாவல்களும் சலித்துப்போய்விட்டன.

'ச்சி என்னடா இது ஒரே கூதலும் பனியுமாக்கிடக்கு...... அதவிட இங்கே ஏதாவது சங்

கம் கோயிலெண்டு செய்ய என்னதான் கிடக்கு. டவுனுக்கு போய் கிளப் — கோயிலெண்டு போறதெண்டால் பல மைல்கள் போகவேண்டிக் கிடக்கு' என அவர் சலித்துக் கொள்வார். அவரின் மனுசிக்கு அவரைவிட யாழ்ப்பாணத்தில் லேடீஸ் கிளப், அடுத்தவீட்டு 'யோகேஸ் புவனேஸ்' எல்லாருடனும் ஆங் கிலத்திலேயே புளங்கிய அவர் களுக்கு படங்கும் 'ரெட்டும்' கட்டிக்கொண்டு மலையிலே கொழுந்தொடிக்கிற லெச்சிமி யோடும், பாப்பாத்தியோடும் காலம்தள்ள முடியுமா என்ன?

நாட்கள் நகர்ந்தன. பொன்னம்பலத்தாரைப் பொ றுத்தவரை நாட்கள் மிக மிக சுலோவாகத்தான் நகர்ந்தன.

பொன்னம்பலத்தார் எஸ் டேட்டுக்குள் தம்பெயரை 'பப் ளிசிட்டி' பண்ண சமூகசேவை கோயில் விவகாரம் என்று ஈடு பட விரும்பி அதற்காக கண் டாக்கு கங்காணிகளோடு சற்று 'நைசாக' வே அவர்களிடம் பழகிவந்தார். இந்த 'நைஸ்' அவர்களுக்குப் பெரிய 'ஐஸ்' ஆகிவிட்டது.

'அடேய் நம்ம பெரிய கௌாக்கரய்யா நம்ம கூட, தோட்டத்து ஜனங்ககூட எப் பிடி பழகுருரு பார்த்தாயா. முன்ன இருந்தவனுங்க மூஞ்ச கூட நாம ஒழுங்கா பாத்திருக் கமாட்டோம். அப்பிடி எதுக் காகிலும் காணப் போனாலும் ,நவ் நோடைம்' இல்லாட்டி 'கெட்அவுட்' என்று நாயீமா திரி பாய்வானுக...... இவரு பெரிய சமூகத் தொண்டரா முடா... யாப்பாணத்துல பெரிய பெரிய கோயிலெல்லாத்துலேயு தலைவரா இருந்திருக்கிருரா ராம்பா... எல்லா நம்ம நல்ல காலம்தா இப்பிடி ஒரு மனுசே நமக்கு கெடைக்கிறதுக்கி...' என கணக்குப்பிள்ளையும் கங்காணி யும் கண்டவர் நிண்டவரிடமெல் லாம் இதைப் பற்றியே பேசிப் பேசி பொன்னம்பலத்தாரின் 'பப்ளிசிட்டிக்கு' ஸ்பீக்கராகி விட்டார்கள்.

பொன்னம்பலத்தார் இப் பிடி அவர்களிடம் பழகுவது மனுசிக்கு அவ்வளவு பிடிக்க வில்லை.

'என்னப்பா நீங்க அவுங்க கூட அப்பிடி பழகிக்கொண்டு 'மெனஸ்' இல்லாம பிறகு நம் மவ.. நம்மளை ஊரிலே மதிப் பினமோ? அதுகள் என்ன பறை சக்கிலி ஜாதிகளோ...... யாரு பார்த்தது. எனக்கெண்டா இது பிடிக்கவே இல்லை. எத்தனையோ வேலையெல்லாம் கிடக்க இந்த எஸ்டேட்டில வந்து விழுந்தனீங் களே... ஊரிலை எண்டா......' என அடிக்கடி அவரிடம் முன கிக் கொள்வாள்.

பொன்னம்பலத்தார் சாதி கோத்திரம் பார்ப்பதில் எமன்! ஊரிலை யாராவது தாழ்ந்தவர் கள் தொட்டுவிட்டால்கூட ஓடி வந்து குளிப்பவர். அப்படிப் பட்டவர் இப்படிப் பழகுவதெல் லாம் பப்ளிசிடிக்கும்அத்தோடு வேறும் சில காரணத்திற்காக வும்தான்.

தோட்டக் கோயிலின் வரு டாந்த கூட்டத்திற்கு அவரை யும் கணக்குப்பிள்ளை கங்காணி யெல்லாம் அழைத்திருந்தனர். முன்பு எல்லாம் இப்படிப் பெரி யதரம் புள்ளிகளை அழைப்ப தில்லைத்தான். அழைத்தாலும் அவர்கள் வரமாட்டார்கள். ஆனல் பொன்னம்பலத்தார் ஊரில் பல கோயில்களையும் நிர் வகித்தவர், சமூகத் தொண்டர் அவரின் வரவால் அந்தப் பழக்

கத்தால் துரையின் சிபார்சுகள் மற்ற உதவிகள் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம். கோயில் நல்ல டவுன் கோயில்களைப் போல் ஆக்கிவிடலாம் என்று தோட்டமக்கள் நினைத்ததில் தவறில்லைத்தான்

பெரிய கிளார்க்கர் 'சைட்' சொல்லிவிட்டால் பெரிய துரையின் 'சிக்னேஜர்' இடைத்த மாதிரித்தான்.

பொன்னம்பலத்தார் மனுசியின் முணுமுணுப்புகளுக்கு செவிசாய்க்காது, கோயில் வருடாந்தக் கூட்டத்திற்கும் சென்றூர். அவரைக் கண்ட தோட்டத்தவர்களுக்கு அது சாமியைக் கண்டமாதிரித்தான்.

தலை நரைத்த பழைய தலைமுறைகளுக்கெல்லாம் இது ஒரே அதிசயமும்கூட.

'அட நானுந்தா இந்தத் தோட்டத்துல எழுவது, எழுவத்தைந்து வருசோ... இருந்திருக்கிறே இப்பிடி நா கண்டதில்லப்பா... பெரிய கௌாக்கரு வராருன்னு பெறவு நாங்க அங்கன நிக்கமாட்டோ அவ்வளவு பயோ... மருவாத... அதவிட தோட்ட ஜனங்க எதுக்கு போயி ஒரு நல்லது பொல்லாதகாரியத்துக்கு கூப்பிட்டாக் கூட பியோனிடம் சொல்லி வெளியே போகச் சொல்லும் பெரிய கிளார்க்குங்களை நாம கண்டிருக்கிறே. இப்பிடி நாம கூப்பிட்டதுக்காவ இந்த கூதலையும் 'பெனி' யே கூட இல்லாம வேஷ்டிய மட்டு கட்டிகிட்டு கோயிலுக்கு பெரிய கௌாக்கரு வந்திருக்காருன்னு பாத்துக்கவே...... எல்லாமே நம்ம நல்ல காலத்துக்குதா...... நம்ம மாரி ஆத்தா கண்ண தொரந்திருக்கு' என முணுமுணுத்துக் கொண்டன.

பழைய கோயில் செயலாளர் கணக்கு வழக்குகளை எல்லாம் சமர்ப்பித்து புதிய கோயில் தலைவர், செயலாளர் பதவிகளுக்கு ஆட்களை பிரேரிக்கும் படி கூறிவிட்டார்.

கணக்குப்பிள்ளை பொன்னம்பலத்தாரை செயலாளராக பிரேரிக்க, வேறு சில இளைஞர்கள் ராமையா என்கிற ஒருவரை பிரேரிக்க சில நரைத்த தலைகள் மெதுவாக அவர்களிடம்,

'அப்பா ஒங்க பிரேரணைய வாபஸ் வாங்கிடுங்க. பெரிய கௌாக்கருக்கு எதிரா நாம்ப ஒருத்தனையும் நிப்பாட்டுறது சரியில்லையே... அவரு நம்பளுக்காக வந்திருக்கிருரு. நாம அதுக்கு மருவாத காட்டவேணு......?'

'நீங்க அவர பிரேரிச்சிங்க. நாம நம்ம பொடியே ஒருத்தன நிப்பாட்டிஇருக்கிறே. ஒனுன்னு நம்ம கோயிலு நம்மல்ல ஒருத்தே வாரதுதா நியாயோ. அவுக எல்லா பெரிய எடோ... அவுக வந்தாங்கன்னு நாம நெனைக்கிற மாதிரி எதுவு செய்யமுடியாது அதுதா......'

'சரி இவனுக பெரிய கொம்பனுக இவுக என்னமோ பொடியனுங்களாசேந்து என்னமோ பெருசா செஞ்சி கிழிச்சிடப் போருனுவ......'

சிறிய சலசலப்பின் பின் பொன்னம்பலத்தார் செயலாளராகிவிட்டார். ராமையாவிற்கு பொடியன்களின் 'சப்போட்' மட்டும்தான் கிடைத்தது.

பொன்னம்பலத்தார் செயலாளராகி விட்டதும் கோயில் தனக்குக்கிடைத்துவிட்டமாதிரி செயல்பட ஆரம்பித்துவிட்டார்

தோட்டக் கோயிலில் முன்பிருந்த நிதி — அத்தோடு டவுனில் எஸ்டேட்டுக்கு சாமான் 'சப்ளை' செய்கிற பெரிய முதலாளிகளையெல்லாம் பிடித்து, ஏதேதோ புரட்டி கோயிலுக்கு புதிய கட்டிடம் கட்ட ஆரம்பித்துவிட்டார். தோட்டஜனங்கள் 'கோயில் நம்ம கோயில்' தானே என்கிற நிலையில் கட்டடம் கட்ட தம்மாலியன்றவற்றை செய்தனர். கட்டடம் கட்ட கூலியில்லாது உழைத்து வந்தனர். ஒருவாறு கோயில் பூர்த்தியாகும் கட்டம். இப்போது டவுன் முதலாளிக் கும்பல், அவர்களின் சம்சாரம் பிள்ளைகளெல்லாம் கார் போட்டு கோயிலுக்கு வந்து போக ஆரம்பித்து விட்டனர். பணம் புரள ஆரம்பித்துவிட்டால் அந்தப் பணத்தை 'அப்படிச் சேர்த்தோம்' என்கிற பயத்திலேயோ என்னவோ பாதியை கோயில் சாமிக்கென்று கொடுத்து திருப்திப்பட்டுக் கொள்ளுகிருர்கள். மற்றவர்களைப் பொறுத்தவரை அது 'உதவி நிதி' அவர்களைபொறுத்தவரை அது சாமிக்குக் கொடுக்கும் 'லஞ்சம்'.

இப்போது படிப்படியாக கோயில் தலைவர்—காரியதரிசி—பொருளாளர் எல்லா நிர்வாகமுமே பொன்னம்பலத்தாரிடமும், டவுன் முதலாளிகளிடமும் சிக்கிக்கொண்டன. பொன்னம்பலத்தாருக்கும் இது சாதகமாகி விட்டது.

இப்போது கோயில் பெயருக்குத்தான்தோட்டக்கோயில். மற்றும்படி கோயில் தோட்ட உழைப்பாளிகள் ஒருவருக்குமே இடம் இல்லாது போயிற்று. தோட்ட நிர்வாகத்திடம் முறையிட்டாலும் பயனென்றுமில்லைத் தான். பெரியகிளார்க் ஆம் என்ருல் பிறகு துரையின் வார்த்தையும் ஆம்தான். அது என்றைக்குமே (நோ) ஆகிவிட முடியாது. இந்நிலையில் அவர்களால் என்ன தான் செய்துவிட முடியும்!

கோயிலுக்கு புதிய கட்டட மும் உருவாகி விட்டது. இப்போது சாம்பிராணி, சூடம் பிடித்த பண்டாரத்துக்குப் பதிலாக அர்ச்சனை பூசை செய்ய யாழ்ப்பாணத்திலிருந்து புது ஐயர் ஒருவரையும் கொண்டு வந்து விட்டார் பொன்னம்பலத்தார்.

தோட்ட மக்களுக்கு இப்போது மாரியம்மனின் அருள் இரண்டாம் படியில்தான். ஏனெனில் புதிய கட்டடத்தில் இரு நிலைகள். சுவாமிக்குமுன் ஓர் இடம். அதன்கீழ் தாழ்வாக ஓர் இடம். அந்த தாழ்வான இடம்தான் இப்போது தோட்டத்தவர்களுக்கு. மேல் படி பெரிய புள்ளிகளுக்கும் அவர்களின் மனுசிமார் பிள்ளைகளுக்கும். சொல்லப்போனல் அங்கு 'பொன்சும்' 'கோயாவும்' 'லிப்ஸ்டிக்கும்' மணக்கும், இருக்கும். கீழ்ப்படியில் வெற்றிலைக் காவிகளும், வியர்வை மணமும் இருக்கும். அவ்வளவு தான்.

முழுமையான ஒரு 'சில' யாழ்ப்பாணக் கோயில்களைப் போலவே அந்தத் தோட்டக் கோயிலையும் ஆக்கிவிட்டார் பொன்னம்பலத்தார்.

இந்த நிலையில் வருடாந்த திருவிழா வந்துவிட்டது.

தோட்டத்து ஜனங்கள் வீடுகளை எல்லாம் சுத்தமாக்கி வெள்ளையடித்து, மாரியம்மனை வரவேற்கத் தயாராகிக் கொண்

டிருந்தனர். தோட்ட இளைஞர்கள் இரவு பகல் பாராது காவடி கரகம், சிலம்படி, நாடகமெல்லாம் பழகிக்கொண்டிருந்தனர்.

ஆனால் கோவிலில் தோட்ட மக்கள் வழமையாகச் செய்கிற எதையுமே செய்யவிடாது அம்மனின் அருகே அவர்களை நெருங்கவிடாது அதிகாரம்செய்துகொண்டிருந்தனர் பொன்னம்பலத்தாரும் சில பெரிய புள்ளிகளும்.

'நீங்களெல்லா அங்காலை வெளியபோய் நில்லுங்கோ! இப்பிடி குளியாமல் கிழியாமல் வந்திட்டினம் கோயிலுக்குள்ள'

'தம்பியவையள் தேர் ஜோடனைக்கெல்லாம் நாங்கள் ஏற்பாடு பண்ணிவிட்டம். நீங்க ஒதுங்கி நிண்டு கவனிச்சால் போதும். அதோட கரகம் நாடகம் கூத்தெல்லாம் இங்க வெக்கவேணும் தெரிஞ்சிதோ. இங்க பெரிய 'கவண்மேந்து' ஆக்களெல்லாம் வந்திருக்கினம்'

இப்படி பல அதிகார ஓடர்களைப் போட்டபடி ஓடிக்கொண்டிருந்தார் பொன்னம்பலத்தார்.

அம்மன்தேர் புறப்பட்டது. மலையில் உழைக்கும் உறுதியான கரங்கள் இம்முறை சாமியைத் தேரில் ஏற்றவில்லை. அதிகாரமும், செருக்கும், பணப் பெருமையும் கொண்ட 'பெரும்' தலைகள்—அவர்களின் செல்வங்கள்தான் சாமியை தேரில் ஏற்றினர்.

அம்மன் தேரில் ஏறியதும் தோட்டத்தவர்கள் தம் வழமையின்படி தப்பும், உருமி மேளமும் தட்ட ஆரம்பித்து, 'வேல்! வேல்! சத்திவேல்' கோஷமும் இட ஆரம்பித்துவிட்டனர்.

இதைக் கண்ட பொன்னம்பலத்தார் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தார்.

'இடியட்ஸ்! அதை நிப்பாட்டுங்கோ. இது என்ன பறையன்களுடைய திருவிழாவெண்டு நினைச்சிட்டியளோ? இல்ல இழவு வீடெண்டு நினைச்சுக்கொண்டிங்களோ... நாங்க திருவிழாவுக்கெண்டு யாழ்ப்பாணத்திலிருந்து பெரிய நாதசுர செட்டெல்லாம் கொண்டுவந்திருக்கிறம். கரகம் சிலம்படி எண்ட தோட்டக் காட்டு ஆட்டங்களெல்லாம் இங்க வேண்டாம். அதுக்கெண்டு அங்கிருந்து சின்னமேளம் வந்திருக்கு தெரிஞ்சுதா? எல்லாரும் சாமிக்குப் பின்னால அமைதியா போங்கோ'

தப்படித்து, கரகம் ஆடிய இளைஞர் கூட்டமெல்லாம் கொதிப்பெடுத்து நின்றது.

'இது எங்க கோயிலு! நாம எப்பவு செய்யிறத தா இப்பவு செய்யனு...... அதுமாதிரி தா செய்வோ... அதுல் என்ன நீ வந்து 'யெவ்வ—யெவ்வன்னு கிட்டு... நீங்க அடிங்கடா மச்சா... ஏதாவது வந்தா நாங்க பாத்துகிறோ......'

ஆனால் அப்போது அவர்களால் எதுவுமே செய்ய முடியாது போய்விட்டது. ஏதாவது இன்று கலாட்டா செய்தால் அதன் எதிரொலி நாளைக்கு வேலைக்காட்டில் ஒலிக்கும். பிறகு தோட்டத்தை விட்டு வேலைக்கென்று அவர்கள் எங்கு தான் செல்ல முடியும்!

தேர் வழமையாகச் செல்லும் லயத்திற்கெல்லாம் போகவில்லை. பூசைவைத்துக்கொண்டு காத்திருந்த லயத்து மக்களுக்கெல்லாம் ஏமாற்றம். தேர் பெரிய துரை, சின்னத்துரை,

பெரிய கிளார்க், டீமேக்கர், சின்னக் கிளார்க் பங்களாக்க ளுக்கு மட்டுமேதான் அம்முறை அருள்பாலித்தது. நாதஸ்வரக் கச்சேரிகளெல்லாம் அவர்களின் பங்களாக்களில் மட்டுமே இடம் பெற்றன. சின்ன மேளமும் அப்படித்தான்.

எப்படியோ 'யெவ்ஞ' ஸ்டைலில் திருவிழாவை நடத்தி டவுன் புள்ளிகளிடம்தான் மதிப்பு பெற்றுவிட்டதில் இறு மாந்து போயிருந்தார் பொன் னம்பலத்தார். தோட்ட ஜனங் களின் குமுறலோ விரக்தியோ அவருக்கு தெரிந்திருந்தும் 'அட கிடக்கிறானுகள் இவன்கள் நம்ம என்னதான் செய்திட முடியும்?' என்று பதவிச் செருக்கில் இருந்துவிட்டார்.

இம்முறை திருவிழாவையும் சென்ற முறையைவிட பிரபல மாகச் செய்துவிட வேண்டும் என்று இப்போதே ஓய்வொழிச் சலின்றி அலைந்து கொண்டிருந் தனர் பொன்னம்பலத்தாரும் கோயில் நிர்வாகக்குழுவினரும்.

இம்முறையும் யாழ்ப்பா ணத்திலிருந்து நாதஸ்வரம், தவில், சின்னமேளம், கதாகா லட்சேபம், பாட்டுக்களுக் கென்று ஆட்கள் முன்னமேயே 'ரிசேவ்' ஆகிவிட்டிருந்தனர். திருவிழா ஆரம்பமாகிவிட்டது. பெரும் புள்ளிகள் தம்மை தம் பணப்பெருமையை விளம்பரப் படுத்திக்கொள்ள கோயிலைக் களமாக்கிப் பாடுபட்டுக்கொண் டிருந்தனர்.

தேர் எல்லாம் பிரமாதமாக ஜோடனை செய்யப்பட்டிருந்தது வழமையாக தமக்கு கோயிலில் இடம் கிடைக்காவிட்டாலும் லய காம்பராக்களையெல்லாம் துப்பரவாக்கி, வெள்ளையெல் லாம் அடித்து பந்தல்போட்டு புத்தாடையெல்லாம் தரித்து அம்மனின் அருளுக்காக காத் திருந்தனர் தோட்ட ஜனங்கள்.

கரகம், தப்பிற்கெல்லாம் அடிக்க, ஆட 'பேர்மிஷன்' பொன்னம்பலத்தார் கொடுக் காது போனாலும்கூட இளைஞர் களெல்லாம் காவடி, கரகம், தப்போடு வெளியில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தனர். அத் தோடு கோயிலின் உட்புறமும் சில தோட்ட இளைஞர்கள் தூய்மை உடையோடு நின்று கொண்டிருந்தனர். அவர்களை பொன்னம்பலத்தார் கண்டும் 'வெளியில போயிருங்க' என சொல்லியும் 'ஏன் நாங்க இங்க முந்தி நிண்டவுங்க தா... இப்பவு நமக்கு நிக்க உரிம இருக்கு!...' என காரமாக அவர்கள் சொல் லியதும் மெதுவாக அவர் நழுவி விட்டார்.

அம்மனை தேரில் தூக்கி வைப்பதற்காக டவுன் முதலா ளிகளையும், தம் மகன்மார்களை யும் 'கம் இயர்' போட்டுக் கொண்டிருந்தார் பொன்னம் பலத்தார்.

அவர் கூப்பிட்டுக்கொண்டி ருக்க உள்ளே நின்றுகொண்டி ருந்த தோட்ட இளைஞர்கள் சென்று அம்மனை தூக்கிவிட்ட னர்.

'அடேய் யார கேட்டடா உள்ளே வந்து சாமிய தூக்கி னீகள்? வையுங்கோடா! வை யுங்கோடா!' எனக் கத்திக் கொண்டுவந்த பொன்னம்பலத் தார், அவர்களைப் பிடித்து வெளியே தள்ள முனைந்தார்.

'சும்மா உடு சேர்... இது நம்ம தோட்டத்தவுங்க செஞ்சி

வெச்ச செலவு... இது தோட்டத்து கோயிலு.. அப்பிடியிருக்க சாமிய தூக்கவேணுமுனு சொல்ல ஒங்கலால எப்பிடி முடியு... நீங்க சாமிய தூக்கிகிட்டு வந்து தேருல வையிங்க .. இவரால என்ன தா செஞ்சிட முடியுமினு... தா பாப்பமே...... முடிஞ்சா அவரு கட்டுன கோயில் கட்டடத்த ஒடைச்சிகிட்டு போருரு. நமக்கு மரத்தடி இல்லாட்டி ஓலை கொட்டகை போதும்......'

சாமியை தூக்கிவந்து தேரிலும் ஏற்றிவிட்டனர். தோட்ட மக்களின் அரோகரா கோஷம் வானை முட்டிற்று.

நாதஸ்வரக் காரர்களும், சின்னமேளக்காரர்களும் மற்றும் பெரிய முதலாளி புள்ளிகளும் அவர்களின் கூட்டத்தவர்களும் என்ன ஏதும் நடந்துவிடுமோ என்கிற நினைப்பில் வந்திருந்த கார்களிலும் நடையுமாய் தத்தமது இடத்தைநோக்கி விரையத் தொடங்கிவிட்டனர்.

'வேல் வேல் சக்திவேல்... அம்மனுக்கு அரோகரா... அம்மனுக்கு அரோகரா' என்ற கோஷத்தோடு தேர் புறப்பட்டு விட்டது.

தப்பிலும் உருமியிலும் 'திருவிழா திருவிழா... எங்க தோட்டத் திருவிழா! தோட்ட ஜனங்க திருவிழா' என உருட்டி உருட்டி அடித்தபடி சிலம்படி, கரகம், காவடி, சகிதம் தேர் லயத்தை நோக்கி போய்க் கொண்டிருந்தது. தேரில் பண்டாரம், சாம்பிராணி சூடம் காண்பித்து தேங்காய் உடைத்து பூஜை செய்துகொண்டிருந்தார். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு செய்வதறியாது திகைத்து நின்றார் பொன்னம்பலத்தார். அவரின் வாய் முணுமுணுத்தது'

'இவனுகளோட இனி நம்மால முண்ட ஏலாது...' ★

---



## செருப்பு

எம். எச். எம். சம்ஸ்

வெய்யில் சுட
சேறப்ப
முள் தைக்க
முதுகுடைய
தோலுரிய—

உழைக்கின்ற
பேர்வழிகாள்!
முதலாளி வர்க்கத்தின்
செருப்பா நீங்கள்......?

ஜேம்ஸ் அல்டிரிட்ஜ்
(ஆங்கில எழுத்தாளர்)




# ஏழாவது திரைப்பட விழா

## ஒரு மதிப்பீடு

அண்மையில் தான் ஏழாவது சர்வதேச திரைப்பட விழா மாஸ்கோவில் முடிவடைந்தது. அதில் பங்கு பெற்ற நீதிபதிகளுக்கு, சிறந்த படம், சிறந்த டைரக்டர், சிறந்த நடிக, நடிகையரைத் தேர்ந்தெடுப்பது என்பது கூட அவ்வளவு கஷ்டமானதாக இல்லை. எல்லாப் படங்களுக்கும் ஒரே பொதுவான அம்சம் ஒன்றை வரையறுத்துக் கூறுவதுதான் மிகவும் சிக்கலானதாகவிருந்தது. சோஷலிச நாடுகளின் திரைப்படங்கள் வளர்ச்சியடைந்துள்ள முதலாளித்துவ நாடுகளின் திரைப் படங்கள், தற்போது புரட்சிகரமான கடமைகளை ஆற்றிவரும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் படங்கள், ஆகியவற்றை ஒத்திட்டுப் பார்ப்பதற்கு, நேர்மையான உரைகல் எது என்பதை வரையறுப்பதுதான் மிகப் பெரிய சிக்கலாகவிருந்தது.

அரசியல், சமூக அமைப்புக்களிலும், கலாசார வளர்ச்சித் தரத்திலும் பல்வேறு மாறுதல்களைக் கொண்ட நாடுகளின் திரைப்படங்களிடையே பொதுவானதொரு அம்சத்தைக் காண முடியுமா? உலகம் இரு மாறுபட்ட அணிகளாகப் பிரிந்து நிற்பது என்ற உண்மையே, பிரச்சினைகளை மதிப்பீடு செய்வதில் இருவேறு தரங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் காட்டவில்லையா? எனினும், பொதுவாகஏற்றுக்கொள்ளப்பட்டவை எவை என்பதை மறந்துவிடாமல், ஒரே பொதுவான நியதியை வரையறுப்பது அவசியமாகிறது; திரைப்படங்களின் கலை நயத்தை நிர்ணயிப்பதும், புதிய உத்திகளைப் பாராட்டுவதும் அவசியமே.

மேலைய நாடுகளில் நடைபெறும் திரைப்பட விழாக்களுக்கும், மாஸ்கோ விழாக்களுக்கும் ஒரு பிரதான வேறுபாடு உள்ளது. மாஸ்கோ விழாக்களில் திரைப்படங்களில் சித்திரிக்கப்படும் பிரச்சினைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆகவே, திரைப் படங்களை மதிப்பீடு செய்வதில், அதன் உள்ளடக்கம் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

கலை நயத்துடன் அன்றாடப் பிரச்சினைகளை எடுத்துரைப்பது, அதற்கான தீர்வுகளைக் காட்டுவது போன்ற அம்சங்களைக் கொண்ட திரைப்படங்களைத் தேர்ந்து எடுக்கவே நீதிபதிகள் முயன்றனர். அத்தகைய படங்களென நாங்களும் ஒத்துக் கொள்ளக் கூடியவை: 'கரும் புள்ளியுள்ள வெள்ளைப் பறவை' (சோவியத் யூனியன்); 'குடியரசின் அட்டார்னி ஜெனரலிடம் போலீஸ் இன்ஸ்பெக்டரின் ஒப்புதல் வாக்கு மூலம்' (இத்தாலி) 'இன்று வாழ்வு, நாளை சாவு' (ஜப்பான்). இப்படங்களுக்கே தங்கப் பதக்கங்க பி ற ாவில் வழங்கப்பட்டன.

இத்தாலிய, ஜப்பானியப் படங்களைப் பார்க்கும்போது, முதலாளித்துவ நாடுகளில் எழுந்துள்ள சமூகப் ரச்சினைகள் மக்களின் தினசரி வாழ்வை அலைக்கழிப்பதை நன்கு தெரிந்து கொள்ள முடியும்; சமூகத்தின் எந்த ஒரு நபரது கதையுமே உணர்ச்சி மயமான ஒரு நாடகக் கருப்பொருளாக அமையும் வண்ணம் உள்ளது

இத்தாலிய படத்தில் வரும் போலீஸ் இன்ஸ்பெக்டரின் கடமை, அந்த அமைப்பைப் பாதுகாப்பது; தான் வாழ்ந்து வரும் அமைப்பைப் பாதுகாப்பதையே தனது கடமையாகக் கொண்ட அந்த இன்ஸ்பெக்டருக்கும், அந்த அமைப்புக்குமே முரண்பாடு ஏற்பட்டுவிடுகிறது. பழங்கால கிரேக்க இதிகாசத்தில் காணப்படும் துன்பியல் அம்சங்களை இப்படத்தில் காண்கிறோம்.

ஜப்பானியப் படத்தில், எவ்வாறு முதலாளித்துவ அமைப்பு ஒரு மனிதனின் ஆளுமையை அழித்து விடுகிறது என்று பார்க்கிறோம். மக்களையே விழுங்கி ஏப்பமிடும் கொடிய அரக்கன் முதலாளித்துவம்— இதுவே இப்படத்தில் இழையோடும் கருத்து.

நமது சமூகத்தின் 'நாடித் துடிப்பை' அளவிடுவதில் ஜப்பானிய பட டைரக்டர்களான தாமியானோ தாமியானியும், கேஃபோ ஷின்தோவும் வெற்றி பெற்றுள்ளனர். ஜப்பானிலோ, இத்தாலியிலோ நடைபெற்ற சம்பவங்கள் எந்த முதலாளித்துவ நாட்டிலும் ஏற்படக்கூடும் என்பதை படம் பார்ப்பவர்கள் நன்கு தெரிந்துகொள்ள முடிகிறது.

இரண்டாவது உலக யுத்தத்தின்போதும் அரண்களுக்கு இருபுறங்களிலும் புகோவினா மக்கள் நடத்திய வீரம் செறிந்த போராட்டத்தைச் சித்திரிப்பதில் 'கரும் புள்ளியுள்ள வெள்ளைப் பறவை...' என்ற படத்தில் சோவியத் திரைப்பட கர்த்தாக்கள் பெரும் வெற்றியடைந்துள்ளனர். சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட இப் படம், நாட்டின் பால் உள்ள ஆழ்ந்த பக்தியைப் போற்றுவதோடு, நாட்டின் கடந்த காலத்தை எடுத்துக் காட்டுவதில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஆக்கபூர்வமான கண்ணோட்டத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது. இது சோஷலிச நாடுகள் திரைப்படங்களுக்கே உரிய அம்சமாகும்; ஏனெனில், இத்தாலிய, ஜப்பானிய திரைப்படங்களில் காட்டப்படுவதை போன்று முதலாளித்துவ உலகுக்கே உரிய சிக்கலான, கொடூரமான பிரச்சினைகள் சோஷலிச நாடுகளில் கிடையாது.

'கொடூரம்' என்ற பொருளுக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் சில திரைப்படங்களில் அளிக்கப் பட்டிருந்தது, அப்படங்களின் ஒரு பலவீனமாகும் 'கொடூரத்திற்காகவே கொடூரம்' என்பது எந்தப்படத்திலும் இல்லை என்பதையும் கூறத்தான் வேண்டும். குரூர உலகின் கொடுமைகளையும் அநியாயங்களையும் உண்மையுடனும், எதார்த்தமாகவும் சித்திரிக்க விரும்பும் அந்த டைரக்டர்கள், தத்ரூபமான அணுகு முறையை கடைப்பிடிப்பதன் மூலம், பிரச்சினை தீர்ந்து விடவில்லை என்பதை மறந்து விடக்கூடாது. ஒரு மனிதனது கஷ்டங்களை இயற்கையாகவே காட்டுவதன் மூலம் பார்ப்போரின் அனுதாபத்தைப் பெற்றுவிட முடியாது. கொடூரத்தை அதற்கே உரிய அவலட்சணத்துடன் சித்திரிக்கும் போக்கு பல திரைப்படங்களில் உள்ளது என்று பல நீதிபதிகளும் வருத்தம் தெரிவித்தனர்.

சிக்கலான, கடினமான பிரச்சனைகளுக்கு நேர்த்தியான, லாவகமான, கலை நயத்துடன் கூடிய தீர்வுகளைக் கூறும் படங்கள், மேற்கூறியவற்றைவிடவும் மதிப்பு வாய்ந்தவை. 'ஜோஹில்', 'அவர்கள் குதிரைகளைச் சுடுகிறார்கள் அல்லவா?' ஆகிய போட்டியில் கலந்து கொள்ளாத இரு திரைப்படங்களும், இந்த அம்சத்தில் குறிப்பிடத் தக்கவையாகும்.

சோஷலிச நாடுகளிலிருந்து திரையிடப்பெற்ற படங்கள் அனைத்துமே, அநேகமாக புரட்சிகரப் போராட்டம் பற்றிய தாகவிருந்தன. இந்த சந்தர்ப்பத்தில் 'மரியாவுக்கு வணக்கம்' என்ற சோவியத் திரைப்படத்தைக் குறிப்பிட விரும்புகிறேன், கதாநாயகியின் வாழ்வு எனும் முப்பட்டைக் கண்ணாடியின் மூலம் தற்கால வரலாற்றைச் சிறப்புறக் காட்டும் படம் அது.

சிறந்த நடிப்பின் மூலமும் (பிரிட்டிஷ் படம் 'கிராம்வெல்'லில் ரிச்சர்ட் ஹாரிஸ்), சிறந்த டைரக்ஷன் மூலமும் (போலிஷ் படமான 'பிர்ச் மரக்காடு') வெற்றியடைந்த படங்களும் பல; 'பிர்ச் மரக்காடு' என்ற போலிஷ் படத்தின் டைரக்டர் தங்கப் பதக்கம் பெற்றார்.

மொத்தத்தில் மாஸ்கோ விழாவில் காட்டப்பட்ட படங்கள், பார்ப்போரை சிந்திக்க வைத்தன. தற்கால சினிமாக் கலையின் புனிதக் கோயிலாக மீண்டும் மாஸ்கோ இடம்பெற்று விட்டது. ★

---

'ஹாமா என்ற பறவை அநேகமாகப் பூமியில் இறங்குவதில்லை. ஆகாயத்திலேயே பறந்து கொண்டிருக்கும். ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும்போதே முட்டைகளையும் இடுகின்றது. அந்த முட்டைகள் பூமியில் வந்து விழுவதற்கிடையில் சூரிய உஷ்ணத்தினால் குஞ்சு பொரித்து விடுகின்றன. குஞ்சுகளும் உடனேயே பறக்கத் தொடங்கி விடுகின்றன.

---

சிறுகதை

# முள்

ஆங்கிலம்
அழகு சுப்பிரமணியம்

தமிழில்
ஈசன்

பார்வதியை விடுதி ஆசிரியை அறைக்குள் கூட்டிச் சென்றார். பார்வதி அறையைச் சுற்றுமுற்றும் பார்த்து அவ்வறை பெண் அதிபரது போன்று தளபாடங்கள் ஒழுங்காக இருப்பதைக் கண்டு பிரமித்தாள். இந்நகரில் இருப்போர் யாபேரும் ஆங்கிலேயர் போல்தான் வாழ்கிறார்கள் என்று எண்ணினாள். தானும் வளர்ந்து அப்படிச் சில வேளைகளில் வாழ இயலும் என்று நினைத்தாள்.

விடுதி ஆசிரியை மாணவியினது கிராம வாழ்க்கையைப் பற்றி விசாரித்தாள். பார்வதி தனது பெற்றோர், சுப்பு எனும் வண்டிக்காரன், அவனுக்குப் புல் விற்பவள் ஆகியோரைப் பற்றிச் சொன்னாள். அவளுக்குப் புல் விற்பவளது பெயர் தெரியாது. ஆனால் அவள் சுப்புவினது புல் விற்பவள் என அழைக்கப்படுவது மட்டும் அவளுக்குத் தெரியும். ஏன் அவள் அப்படி அழைக்கப்படுகிறாள் என்பது அவளுக்குத் தெரியாது. அதிகமாக சுப்பு புல் விற்பவளின் பின் பாகத்தை நுள்ளி கேலி செய்வது மட்டும் பார்வதிக்குத் தெரியும். வேறு யாராவது அது போல் நுள்ளினால் அவளுக்குக் கோபம் பீறிட்டு வரும். ஆனால் சுப்பு நுள்ளினால் அவள் மகிழ்ச்சியுற்றாள்.

'நீ ஆங்கிலம் கற்க வேண்டும், ஒவ்வொரு நாளும் நான் பாடம் சொல்லித் தருவேன்' என விடுதி ஆசிரியை பார்வதிக்குச் சொன்னாள்.

விடுதி ஆசிரியை மிகவும் பிரயத்தனப்பட்டு படிப்பித்தாள். பார்வதி எழுத்துக்களை விளங்க மிகத் தடங்கினாள்.

ஆசிரியை பொறுமை இழந்து வைதாள். பார்வதி அழுதாள். 'அழாதே, தயவு செய்து அழாதே, ஆரம்பத்தில் கஷ்டமாக இருக்கும், பின்பு எழுத்துக்களை கிரகித்து விடலாம். நீ, ஓர் கெட்டிக்காரி, உனக்குத்தான் எண் கணிதம் நன்ருகத் தெரிகிறதே' என்று ஆசிரியை கூறினுள்.

பார்வதி கையால் கண்ணீர்த்துளிகளைத் துடைத்தாள். ஆசிரியை ஒருதுண்டு சொக்கிளேற் பெண்பிள்ளையின் கையில் கொடுத்தாள். அவள் அதை வாங்கி வாயில் போட்டு ஆசிரியை பக்கம் பார்த்தாள்.

'அதை உண், ஆனுல் அதற்குமுன் எனக்கு நீ நன்றி செலுத்த வேண்டும். யாராவது உனக்கு ஏதாவது தந்தால் உடனே 'உங்களுக்கு நன்றி' என்று கூறுதல் வேண்டும்' என ஆசிரியை புகட்டினுள்.

'உங்களுக்கு நன்றி'

'இல்லை, 'உங்களுக்கு நன்றி மேற்றன் அக்கா' என்று நீ கூற வேண்டும்'

'உங்களுக்கு நன்றி, மேற்றன் அக்கா'

குழந்தைப்பிள்ளைகள் சூழ யேசுநாதர் இருக்கும் ஓர் புகைப்படத்தைக் காட்டி, 'இதை எப்பொழுதாவது பார்த்திருக்கிருயா?' என மேற்றன் அக்கா வினவினுள்.

'இல்லை. அது யார்?' எனப் பார்வதி வினவினுள்.

'அது யேசு நாதரது படம் அவர்தான் எங்களை ஆள்பவரும், காப்பவரும் ஆவர்'

'அப்படியானுல் அதன் அர்த்தம் என்ன?'

'அவர் எங்களைப் போன்ற பாவிகளைக் காக்கவந்தவர். நாங்கள் காக்கப் படட்டும் என்று அவர் சிலுவையில் மரித்தார்' ஆசிரியை பார்வதியைப் பார்த்தாள். பிள்ளை படத்தை சும்மா ஊன்றிப் பார்த்தது.

'உனக்கு இப்பொழுது விளங்காது நீ வளரவேண்டும். அதுவரை பொறுத்திரு. ஆனுல் இதை மட்டும் தெரியவேண்டும். யேசுநாதர் பிள்ளைகளை நேசித்தார். அவர் கூறினுர், கடவுளின் இராச்சியத்தில் குழந்தை போன்றேர்க்கே இடமுண்டு'

பிள்ளை தலையைச் சொறிந்தது.

'நீ அவரிடம் செல்ல வேண்டும் பார்வதி. அவர் உன்னை வரவேற்பார். கட்டாயம் செல்ல வேண்டும்'

'நான் அவரைப்பார்க்காது எப்படி அவரிடம் செல்ல முடியும்? அவர் பாடசாலைக்கு வருவாரா?'

'அட மடைப்பிள்ளை. உனக்கு ஒன்றும் விளங்கவில்லை ஒரு கிறீஸ்தவப் பிள்ளைக்கு எல்லாம் தெரிந்திருக்கும். உன்னை உன்னுடைய பெற்றேர் முறையாக வளர்க்கவில்லை'

'மேற்றன் அக்கா?'

'என்ன வேண்டும்?'

'அவருடைய மனைவியர் எங்கே?'

'யாருடைய?' என்று கோபத்துடன் மேற்றன் வினவினுள்.

பார்வதி கையால் படத்தைக் காட்டி 'அவருடைய,

அவர் பெயர் எனக்குத் தெரியாது'

'ஆ, தெய்வ நிந்தை!' மேற்றன் கத்தினுர். பின்பு படத்தை மேசைமேல் வைத்துவிட்டு, தனது தலைமேல் கையால் அடித்து 'அப்படியான ஒரு கேள்வியை எப்படித் துணிந்து கேட்பாய்? ஆ, நான் இப்பொழுது என்ன செய்வேன்? நீ கடவுளுக்கு எதிராக பாவம் செய்து விட்டாயே'

மேற்றன் மிகவும் பயந்து விட்டார் பார்வதி தனது மூட வினவால் ஆண்டவனுக்கெதிராக பாவம் இழைத்து விட்டாள் என எண்ணினுர். எப்படி புனிதத்திலும் புனிதமான ஆண்டவருக்கு ஓர் மனைவியுண்டு என்று கூறமுடியும்? அவர் படத்தின் முன் முழந்தாழிட்டு கைகள் இரண்டையும் இணைத்து ஒருதடவை செபம் செய்தார்.

பெண்ணின் நடத்தையைப் பார்த்ததும் பார்வதி கலக்கமுற்று, அவளை அணுகி, முழந்தாழிட்டு மன்னிப்புக் கோரினுள்.

'நான் எப்படி உங்களுக்குக் குற்றம் செய்து விட்டேனே தெரியவில்லை. நான் உங்கள் கடவுளுக்கு இரு மனைவியரா என்பதன் காரணம் எங்கள் கடவுளுக்கு இரு மனைவியர் இருப்பதனுலேயே' என்றுள் பார்வதி.

'யார் அந்தக் கடவுள்?'

'சுப்பிரமணியர்'

'ஆ, யேசுநாதருடன் எப்படி உங்கள் கடவுளை ஒப்பிட முடியும்?' என கையைப் பிசைந்து கத்தினுள். பின்பு பார்வதியை ஒரு கரைக்குத் தள்ளிவிட்டாள்.

'அதோ, அங்கே போய் இரு' எனக் கூறிவிட்டு அறையில் அங்குமிங்கும் நடந்தார். அமைதியின்றி காணப்பட்டார். சிறிது நேரத்தின் பின் பெண் பிள்ளையை நாடிச் சென்று பார்வதியின் மயிரைக் கோதிக் கொண்டு கூறினுள்.

'இப்படியான வார்த்தைகள் ஒன்றும் சொல்லல் ஆகாது, பிள்ளை. காலம் போக நீ நன்றுக கற்பாய். நீ யேசுநாதரிடம் செல்ல வேண்டும். உன்னைக் காக்க அவரால் மட்டுமே இயலும்'

பார்வதியை மடியில்வைத்து மேற்றன் அக்கா கூறினுள்: 'கவனி, தற்போது நீ எங்களுடன் இருக்கின்றுய் உன்னுடைய தாயாருடனல்ல, ஆகவே எமது சொல்லையே கேட்க வேண்டும். நீ காக்கப்படவேண்டும். ஆயின் யேசுநாதரிடம் செல்லவேண்டும்'

'காக்கப் படுதல் என்பதன் அர்த்தம் என்ன?'

'சுவர்க்கத்திற்குப் போக வேண்டுமாயின் யேசுநாதரிடம் செல்ல வேண்டும்'

'அப்படியாயின் எனது தாயார் சுவர்க்கத்திற்குப்போக மாட்டாரா? என கண்ணை அகல விழித்துக்கொண்டு பார்வதி வினவினுள்.

'எனக்கு அதைப்பற்றித் தெரியாது' என்று அசிரத்தையுடன் மேற்றன் விடையளித்தாள். பிள்ளையின் கண்களில் ஒருவித பீதி தென்படுவதைக் கண்ட மேற்றன் பின்வருமாறு கூறினுள். 'உன்னுடைய தாயாருக்கு ஒருவித பிழையும் வராது. இதோபார், பார்வதி. உன்னுடைய தாய் யேசுநாதரைப் பற்றியும் அவரது போதனைக

ளைப் பற்றியும் கேள்விப்படவில்லை. ஆனால் கேள்விப்பட்டு விட்டு பின்பு அவருடைய அழைப்புக்கு விடையளிக்காதோர் சுவர்க்கத்திற்குச் செல்ல மாட்டார்கள்'

பெண்பிள்ளை விரலைக் கடித்துக்கொண்டு சிந்திக்க ஆரம்பித்தாள் பார்வதிக்கு தான்சொன்னது விளங்காதா என்று வியப்புற்றாள் மேற்றன்.

அப்பொழுது அவர்களுக்குப் பாடசாலை மணி அடித்துச் சத்தம் கேட்டது. மத்தியான இடை நேரத்தையிட்டே அந்த மணி அடித்தது என்பதை மேற்றன் சொன்னார். வெளி மாணவர்கள் தங்கள் மதிய உணவுக்கு வீடு செல்வார்கள். விடுதி மாணவர்கள் விடுதியிலேயே உணவை உண்பார்கள்.

'எனக்குப் பசியாக இருக்கிறது மேற்றன் அக்கா, எனக்கு உண்ண ஏதாவது உண்டா?' எனக் கேட்டாள் பார்வதி.

'தயவு செய்து, மேற்றன் அக்கா' என்று கூறு.

'தயவு செய்து, மேற்றன் அக்கா'

'நான் சென்று உனக்கு கொஞ்ச உணவு கொண்டு வருகிறேன், நான் உனக்கு எப்படி முள் கரண்டியும் மற்றக் கரண்டியும் உபயோகித்து உண்ணுவது என்பதைக் கற்பித்த பின்னரே நீ உணவு மண்டபத்திற்குச் செல்ல வேண்டும்'

'அது என்ன?'

'பொறு பார்க்கலாம்'

மேற்றன் சிறிது நேரத்தில் ஒரு கோப்பையில் சோறு, கறி இட்டுக்கொண்டு வந்தார். முள் கரண்டியும் மற்றைய கரண்டியும் சோற்றினுள் ஆழ்த்தப்பட்டிருந்தது. பார்வதி ஊன்றிப் பார்த்தாள்.

'மடைச்சி முழுசிப் பாராதே, இங்கே எனக்குப் பக்கத்தில் வந்து உட்காரு, நான் எப்படி முள் கரண்டி உபயோகித்தல் என்பதைக் காட்டுகிறேன்.

'இல்லை இல்லை, எனக்கு அவைகள் உபயோகிக்க விருப்பமில்லை நான் என்றும் விரல்கள் உபயோகித்து உண்டு வந்திருக்கிறேன். தயவு செய்து என்னை விரல்கள் உபயோகித்து உண்ண விடவும். எனக்கு அதிக பசியாகவிருக்கிறது, அக்கா'

'நீ வீட்டில் கையால் சாப்பிட்டாய் இப்பொழுது ஓர் ஆங்கில பாடசாலையில் கற்கிறாய் என்பதை மனதில் வை. ஆகவே ஆங்கிலேயர் உண்ணும் முறைப்படியே நீயும் உண்ணவேண்டும்.

'இல்லை, இல்லை, அவைகளைத் தொட எனக்குப் பயமாக இருக்கிறது. அந்த முள்ளு எனது கைகளைக் குத்திவிடும். தயவு செய்து கையால் உண்ண விடவும். எனக்குப் பசியாக இருக்கிறது அக்கா'

'முட்டாள்போல் நடியாதே இது முள் அல்ல. இது முள் கரண்டி, அது உன்னைக் குத்தாது நான் உன்னைக் கையால் உண்ண விடமாட்டேன். சரியான நடைமுறைகளைப் புகட்டாது ஒரு புதிய மாணவியை வைத்திருத்தல் புளியடிப் பாடசாலையில், விதிகளுக்கு ஒவ்வாது. நல்ல பிள்ளைபோல் எனதருகில் வந்து உட்காரு, அவைகளை எப்படி உபயோகிக்க வேண்டும் என்று நான் காட்டுகிறேன்'

பார்வதி பெண்ணின் பக்கத்தில் அமர்ந்து கவனமாகப் பார்த்தாள். மேற்றன் செய்து காட்டல் ஒன்று நடத்தினுர். பின்பு பிள்ளையும் புது வழியாக உண்ணத் தொண்டித்தது. கொலேகாரன் கத்தியைப் பிடிப்பது போல் பார்வதி முள் கரண்டியைப் பிடித்தாள். மேற்றன் பார்வதியைத் திருத்தினுள். இப் புதிய கலையை கற்க சில காலம் சென்றது.

'மேற்றன் அக்கா, நான் என்றும் முட்களின் உதவியுடன் தான் உண்ண வேண்டுமா? விடுதியில் உள்ள சகல பெண் பிள்ளைகளும் அவற்றின் மூலமா உண்பார்கள்? என வினவினுள்.

'ஆம்'

'அப்படியாயின், உண்ட பின்னும் அவர்களுக்குப் பசியாக இருக்கும்'

மேற்றன் சிரித்துக்கொண்டு 'நீ ஓர் குறும்புக்காரி'

'மேற்றன் அக்கா!'

'என்ன?'

'நான் காக்கப் படுவேனு?'

'நீ யேசுநாதரிடம் சென்ருல்'

'அவரும் முள்ளினுல்தான் உண்பாரா?'

மேற்றன் இதற்கு விடையளிக்கவில்லை. பார்வதி முள் கரண்டியால் உண்டு பண்ணிய ஒழுங்கின்மையை மேற்றன் சரி செய்தார், பின்பு அறையில் அங்கும் இங்கும் நடந்தார். அவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். கண்கள் நிலத்தையே நோக்கியிருந்தன. கைகள் இரண்டும் பின்னி பின் பக்கத்தில் இருந்தன. கிறீஸ்வவனுகப் பிறவாதது இந்தப்பிள்ளையின் துர்பாக்கியம் என்று மேற்றன் சிந்தித்தார். இருந்த போதிலும் தான் தெண்டித்து மதமாற்றம் செய்யலாம் மிசன் அதிகாரிகள் மிகவும் மகிழ்வுறுவர்.

அவர் பார்வதியின் பக்கம் திரும்பினுர்.

அவள் கொட்டாவி விட்டாள்.

'நீ நன்ருகக் களைத்து விட்டாய், பார்வதி. சிறிது நேரம் தூங்கினுல் நல்லது'

'சீ, சீ, அந்த முள்ளு' என்று கண் இமைகள் மூட மூட விடையளித்தாள். மெதுவாக மேற்றனின் கட்டிலில் தனது உடலை நீட்டித் தூங்கி விட்டாள். ★

---

மல்லிகை ஏஜண்டுகள் இந்த மாதத்துக்குள் தமது பாக்கியைத் தீர்க்கும்படி வேண்டப்படுகின்றனர். தவறினுல் தொடர்ந்து மல்லிகை அனுப்பப்பட மாட்டாது.

சந்தா முடிந்தவர்களுக்கும் இதே விதிதான்.

---

கவிதை

மூலம்: விமால் திஸநாயக்க

தமிழில்: கே. எஸ். சிவகுமாரன்

# காலமும் அறிவும்

நாங்களிருவரும் மாலை ஒளியில் உலாவினோம்
ஓர் இளந்தென்றல் —
மல்லிகையின் இனிய சுகந்தம் — வண்ண முகில்கள்
'பூமியின் விளிம்புக்கே நடப்போம்' என்றாள் அவள்
நான் முறுவலித்தேன்.
சடுதியில் பயங்கர ஒலியொன்றைக் கேட்டோம்.
(ஓ எத்தகைய பீதி தரும் சத்தம் அது!)

நாங்கள் திரும்பிப் டார்த்தோம்.
எங்களுக்குப் பின்னால் மனித உருவம் ஒன்று
ராக்ஷதப் பாதங்களினால் மண்ணில் இடித்து நின்றது.
பயந்தாலும், பாதிக்கப்படாதவர்போல் நாம் பாவனைசெய்தோம்
'அங்கே பாருங்கள் அது காலம்' என எச்சரித்தாள் அவள்.
'இல்லை அன்பே, புத்தி அது' என்றேன் நான்.

(நன்றி
'நியூ ஸிலோன் ரைட்டிங்')

கார்த்திகேசு **சிவத்தம்பி**




# ஈழத்தின் ஆக்க இலக்கிய நூல் வெளியீடு

*1948 முதல் 1970 வரை ஈழத்தில் வெளியான தமிழ் ஆக்க இலக்கிய நூல்கள் பற்றிய ஓர் ஆய்வு*

ஈழம் முழுவதும், ஒருங்கிணைந்த அரசியல் தனித்துவமும் சுயாதீனமுமுள்ள ஒரு தனி நாடாக உலக அரசியலரங்கில் இயங்கத்தொடங்கி இப்பொழுது இருபத்தொரு வருடங்களாகி விட்டன. அதாவது இலங்கை சுதந்திரம் பெற்று இருபத்தொரு வருடங்களாகி விட்டன. ஈழம் தனது சுதந்திரத்தை இழப்பதற்கு முன்னர் அது தனியொரு இராச்சியமாக விளங்கவில்லை. 1948-இல் பெற்ற அரசியற் சுதந்திரத்துடனேயே அது பூரணமான, நன்கிணைக்கப் பெற்ற தனியரசாகிற்று. எனவேதான் 1948-இல் இலங்கைக்குக் கிட்டிய அரசியற் சுதந்திரம், இலங்கையின் வரலாற்றில் முக்கியமான ஒரு தேசிய நிகழ்ச்சியாக விளங்குகின்றது.

1948-இல் ஆரம்பித்த அத் தேசியப்பிணைப்பின் பின்னர், ஈழத்தின் சகல துறைகளிலும் வளர்ச்சிகள் பல ஏற்பட்டன. பொதுப்படையாகத் தேசத்தின் அமைப்பிலும், சிறப்பாகத் தேசிய இனங்கள் ஒவ்வொன்றினது அமைப்பிலும் பல முன்னேற்றங்கள் — படிப்படியாக ஏற்பட்டன. அம் முன்னேற்றத்தை விரும்பாத சக்திகள் இந்த இருபத்தொரு வருட காலத்தில், எப்பொழுதும் தொழிற்பட்டு நின்றனவெனினும், — நிற்கின்றனவெனினும் — நாடு வளர்ந்து கொண்டே செல்கின்றது. முன்னேற்றம் என்பது தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகும். தேசத்தின் பொதுப்படையான — அரசியற், சமூக, பொருளாதார, பண்பாட்டு — வளர்ச்சியின் சிறந்த சின்னங்களில் ஒன்றுக அமைவது இலக்கியமாகும். மக்கள் யுகத்தில் இலக்கியம் உயர்நிலைச் சமூகத்தின் இயக்க சக்திகளான குரவர்களின் சொத்தாக மாத்திரமல்லாது, நாட்டில் வாழும் எல்லா மக்களையும் பிரதிபலிப்பதாக இருப்பதால் — இது சனநாயகம், வாக்கு

ரிமை முதலியன ஏற்படுத்திய தவிர்க்கமுடியாத முன்னேற்ற மாகும்—, இலங்கையிலும் இவ் இலக்கிய வளர்ச்சி விரிந்து பரந்து வரும் வெகுசன சமூக, அரசியல் ஈடுபாட்டினை வெளிப் படுத்துவதாக அமைகின்றது.

இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்கின்ற மக்களின் வாழ்வி லும் இப்புதிய அரசியலுணர்வு, சமூக விழிப்பு, பொருளாதார மாற்றம் ஆகியன ஏற்பட ஏற் பட அவைகளைப் பற்றிய 'எழுத்து' க்கள் தோன்றலா யின.. வடமாகாணத்தில் மாத் திரமல்லாது, கிழக்குமாகாணத் திலும், தெற்கு, மத்திய மகா ணங்களிலும், மேற்கு மகாணத் திலும் வாழும், தமிழ்பேசும் மக்கள் இலக்கியப்பொருளாகி னர். இப் பண்பு முன்னர் எக் காலத்திலும் இருக்கவில்லை. முஸ்லீங்கள் தமிழுக்காற்றிய 'தொண்டு' மட்டக்களப்புத் தமிழுக்காற்றிய 'தொண்டு' என்று இவ் வளர்ச்சிகளுக்குச் சுதந்திரத்திற்கு முன்னரும் பின் னரும் விருது வழங்கப்பட்ட தெனினும், சுதந்திரத்தின் பின் னரே, இம் மக்கட் குழுவினர் தம் வாழ்க்கையைத் தமது மொ ழியில் எழுதித் தமது அநுபவங் களைப் பிறதேசத்து தமிழ்ப் பேசும் மக்களுடன் பகிர்ந்து கொள்ளத்தொடங்கினர். அதா வது சுதந்திர காலம்வரை (மத, பிரதேச உணர்வுகளால்) தனித் தனித் தனியாகக் கிடந்த தமிழ் இலக்கிய முயற்சிகள் இப் பொழுது ஒன்ருக இணைக்கப் பட்டன. முன்னர் வேற்றுமை கள் வலியுறுத்தப் பட்டன. பின் னர் வேற்றுமையில் ஒற்றுமை காணப்பட்டது — காணப்படு கின்றது. இளங்கீரன் முஸ்லிம் கள் தமிழுக்காற்றிய தொண் டின் ஓர் அமிசமாகவோ: டொமினிக் ஜீவா கிறித்தவம் தமிழுக்காற்றிய தொண்டின் அமிசமாகவோ நினைக்கப்படாது (தொண்டுப் பட்டியல் காரர் கள் தயவுசெய்து கவனிக்குக!) இவர்கள் யாவரும் ஈழத்துத் தேசிய இலக்கியத்தின் பிரதி நிதிகளாகக் கணிக்கப்படுகின் றனர்.

இந்த வளர்ச்சி நாட்டின் அரசியல் வரலாற்றிலும், இலக் கிய வரலாற்றிலும் முக்கியமான இடம்பெறவேண்டிய ஒன்ருகும்.

தேசிய வளர்ச்சியில் இவ்வி லக்கிய முன்னேற்றங்கள் பெறும் இடம் ஒருபுறமிருக்க, தமிழ் பயிலப்படும் நாடுகளில் தமிழ் இலக்கியம் அடைந்த முன்னேற் றத்திலும் இது மிக முக்கிய மான இடத்தைப் பெறுகின்றது. உண்மையைக் கூறினல், முன் னெக்காலத்தையும்விட, 1948க் குப் பின்னரே, ஈழத்தின் தமிழ் இலக்கியவளர்ச்சி, பொதுப்ப டையான தமிழ் இலக்கிய வளர்ச்சி, பொதுப்படையான தமிழ் இலக்கிய முன்னேற்றத் தில் தனித்துவமான இடத்தைப் பெற்றது. சுதந்திர காலத்துக்கு முன்னர் ஈழத்தில் ஏற்பட்ட தமிழ் இலக்கிய இயக்கங்கள் தமிழின் பொதுப்படையான முன்னேற்றத்துக்கும் பாரம்பரி யமான (மத, இலக்கணத்) தூய்மைக்காகவும் போராடின வேயன்றி, அவை ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை வெளிப்பாட்டைத் தமிழ் இலக் கியத்தின் ஒரு தனி அமிசமாக நிலைநிறுத்தவில்லை. தெளிவாகக் கூறுவதானல், முந்திய இலக் கிய முயற்சிகள் ஈழத்தின் தனித்துவத்தைத் தமிழின் ஓர் அமிசமாக வற்புறுத்தத் தயங் கின, மாருக, ஈழத் தமிழ் மக்

களின் வாழ்க்கை, புராதன தமிழ் பாரம்பரியத்துக்கு (சைவ சித்தாந்த நெறியே தமிழர் பாரம்பரிய நெறியென வற்புறுத்தப்பட்டது) இயைவதாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தின. சுருக்கமாகக் கூறுவதானால், சுதந்திரத்துக்குப் பின்னர் ஈழத்தில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சி, தமிழ் இலக்கியப் பரப்பில் புதியவொரு விரிவு வட்டத்தை ஏற்படுத்திற்று.

இக்காரணத்தினால், இக்காலப் பிரிவில் ஈழத்தில் ஏற்பட்டுள்ள இலக்கிய வளர்ச்சி பற்றி ஊன்றி ஆராய்வது தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடுடையோர் (இந்தியாவிலுள்ளவர்கள் உட்பட) யாவரதும் கடமையாகும்.

இக்காலப்பிரிவில் ஏற்பட்ட இலக்கிய முன்னேற்றத்தின் சிறப்பமிசமாக அமைவது ஆக்க இலக்கியமேயாகும். ஆக்க இலக்கியங்களின் வளர்ச்சியைக் கொண்டு, நாம் இந்நாட்டில் தமிழ்பேசும் மக்களிடையே ஏற்பட்ட தேசியப் பிணைப்புணர்வையும் அதன் மூலமாகத் தமிழ் இலக்கியப் பரப்பு விரிவில் ஏற்பட்ட வளர்ச்சியையும் நாம் ஓரளவு மட்டிடலாம்.

இலக்கிய வளர்ச்சி பற்றிய ஆய்வுபன் முகப்பட்ட ஒன்றாகும். மிகவிரிந்த நிலையில் அது வரலாற்றில் ஒரு பிரிவு. இங்கு, இவ்விலக்கியவளர்ச்சியின் பிரத்தியட்ச நிலையான நூல் வெளியீடு பற்றியும், அந்நூல் வெளியீட்டிற் காணப்படும் முக்கிய பண்புகள் பற்றியும், அப் பண்புகள்மூலம் இவ்விலக்கிய வளர்ச்சியின் நெறிபற்றியும் சிறிது ஆராயப்படும். இந்த ஆய்வு அண்மைக்கால இலக்கிய இயக்கத்தில் 'கண்டதுண்டு கேட்டதில்லை' யாகவிருந்த சில அமிசங்களை வலியுறுத்த உதவும்.

இத்தகைய ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்வதில் எம்மிற் சிலருக்கு இலக்கிய இயக்கங்களிற் பங்கெடுத்துக் கொண்டவர்கள் என்ற முறையிலும், அக்காலப் பகுதியில் நடந்தேறிய இலக்கிய நிகழ்ச்சிகளின் தன்மைகளை நேரடியாக அறிந்தவர்கள் என்ற முறையிலும் — வாய்ப்பான ஓர் இடம் உண்டு. வாழ்க்கையனுபவ அறிவைக் கொண்டு சில பண்புகளை துலக்கமாக விளக்கலாம்.

ஆனால் இந்த வாழ்க்கையனுபவ அறிவு துணைப்பொருள் தான். இம் முயற்சியின் அடிப்படைத் தேவையாக அமைவது நூலகவியல் நெறிகளுக்கியைய அட்டவணைப் படுத்தப்பட்ட நூற்பட்டியலேயாகும். தமிழ் இலக்கிய வரலாற்றை நூற்பட்டியலாக மாத்திரமே கணிக்கும் இலக்கிய சிரேஷ்டர்கள் வாழும் ஈழத்தில், பட்டியல்களுக்குத் தட்டுப்பாடு இருக்கமுடியாதே எனப் பலர் எண்ணுவர். இருப்பினும், பூரணமான பட்டியல் இல்லையென்பது கசப்பான உண்மையாகும்.

ஆயினும் இத்துறையில் பேருதவி செய்யும் மூன்று நூற்பட்டியல்கள் கைக்கெட்டின.

ஒன்று கனக செந்திநாதனால் தொகுக்கப்பட்டு யாழ் இலக்கிய வட்டத்தினால் (1966 இல்) பிரசுரிக்கப்பட்டது. 'ஈழத்துத் தமிழ் நூல் வழிகாட்டி' எனும் இத்தொகுப்பு வரதரின் பலகுறிப்பு, ஆரம்பப் பதிப்புக்களிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இதில் 1950-க்கு முன்னர் வெளிவந்த நூல்களின் பெயர்கள் காணப்படவில்லை.

மற்றது, 1-3-71-இல் வெளிவந்த வரதரின் பலகுறிப்பு நான்காவது பதிப்பிலுள்ள புத்தகப் பிரிவிலுள்ள பட்டியலாகும். இப்பதிப்பில் 1955-க்குப் பின் வெளிவந்த நூல்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. 'வழிகாட்டி' யிற் காணப்படாத பொருள் அடிப்படையான நூற்பகுப்பு முறை இப்பதிப்பில் காணப்படுகின்றது. இதனையும் கனக செந்திநாதனே தொகுத்துள்ளார்.

மூன்றாவது, அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் இலங்கைக் கிளை, 1971 பெப்ரவரி 4 — 15 - ஆம் திகதிகளில் நடத்திய ஈழத்துத் தற்காலத் தமிழ் நூற் காட்சி (1948—1970) யின் பொழுது வெளியிடப்பெற்ற தேர்ந்த நூற் பட்டியல் ஆகும். இப் பட்டியலிலுள்ள நூற்பகுப்பும், அட்டவணை முறையும் நூலகவியல் நெறிகளுக்கியைய மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த அளவில் இத் தொகுதி, மற்றையவற்றிலும் பார்க்கப் பயனுடைத்தாயுள்ளது என்பதைக்குறிப்பிடத்தான் வேண்டும். இப்பட்டியலைக் கலாநிதி க. கைலாசபதியும், திரு. எஸ்.எம். கமால்தீனும் தயாரித்துள்ளனர். (வரதரின் பலகுறிப்பில், நூற்பகுப்பும் அட்டவணையும் நூலக நெறிகளுக்கியையச் செய்யப்படின் அது அக் கையேட்டின் பெறுமதியை மேலும் உயர்த்தும்)

இம் மூன்று தொகுதிகளில் ஒன்றாவது 'பூரணமான பட்டியல்' என்ற உணர்வுடன் வெளியிடப்படவில்லை. ஒவ்வொரு பட்டியலும் அதனதன் பூரணமின்மையை வலியுறுத்தியே செல்கின்றது. ஒரு பட்டியலில் இடம்பெறும் சில நூல்கள் இன்னொரு பட்டியலிற் காணப்படவில்லை. ஒரு பட்டியலில் சிறுகதை நூலாகக் கொள்ளப்பட்டுள்ள ஒரு நூல், இன்னொன்றில் நாவலாகக் கொள்ளப்பட்டுள்ளது. (பொ. சண்முகநாதனின் வெள்ளரி வண்டி) இவ்வாறு இப் பட்டியல்களிற் சில உள்ளார்ந்த குறைபாடுகள் காணப்படுகின்றனவென்பது உண்மையே. இத்தகைய பட்டியற்றொகுப்பு, அரசாங்கச் சுவடித் திணைக்களத்திலுள்ள நூல்களையும் குறிப்புக்களையும் பதிவுகளையும் கொண்டு தயாரிக்கப் படுகின்றபொழுதே, பூரணத்துவம் பெறும். இத்தகைய முயற்சிகள் தவறாகச் செய்யப்படுவதால், பிழையான தகவல்கள் உண்மையானவையாக உலாவத் தொடங்கிவிடும் என்பதற்காகவே நூலகவியல் வல்லுநர் இப் பணியினை விருப்பு முயற்சியாளரிடமிருந்து எடுத்துத் தாம் செய்து வருகின்றனர். நூற் சேகரிப்புக்கும் புத்தகப் பட்டியல் தயாரிப்புக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

ஆயினும் விருப்பு முயற்சியாளரின் முன்னோடிச் சேவை முக்கியமானதாகும்.

இப்பொழுதுள்ள நிலையில் இப்பட்டியல்கள் தனித்தனியே பூரணமற்றவையாக விருப்பினும் ஒன்றாக இணைத்து ஆய்கின்ற பொழுது அவைதரும் தகவல்கள் 'கிடைப்பனவற்றுள் நம்பிக்கையானவை' யாகவிருக்கும். மேலும் இப்பட்டியல்கள் பூரணமற்றவையெனினும், இவற்றிலுள்ள தகவல்கள் மாதிரிக் கணிப்பீட்டுக்குப் பெரிதும் உதவும் இக்கட்டுரையும் அத்தகைய மாதிரிக் கணிப்பீட்டுக்கான ஓர் அறிமுக முயற்சியாகவே எழுதப் படுகின்றது. ஈழத்துத் தற்காலத்

தமிழ் இலக்கிய வெளியீடுகள் பற்றிய அறிவு, எவ்வாறு இக் காலப்பிரிவின் இலக்கியப் பண்புகளை மறைமுகமாகவும் நேரடியாகவும் எடுத்துக் காட்டுகின்றன என்பதைக் காட்டுவதற்காகவே இம் முயற்சி மேற்கொள்ளப் படுகின்றது. 'பொய் பச்சைப் பொய், புள்ளிவிவரங்கள்' என்ற பிரபல ஆங்கில மேற்கோள் வாசகத்தை அறியாது இம் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. அத்துணை வன்மையாகக் கண்டிக்கப்பட்ட'பின்னரும், புள்ளி விபரமே, திட்ட வகுப்புக்களுக்குத் தொடர்ந்து உதவிவருகின்றது.

இக்கட்டுரையில், ஆக்க இலக்கிய நூல்களே ஆய்வுக்கெடுக்கப்பட்டுள்ளன. ஆக்க இலக்கியம் என்ற பெரும் பிரிவின்கீழ், புனைகதை, நாடகம், கவிதை என்பன எடுக்கப்பட்டுள்ளன. புனைகதை சிறுகதை-நாவல் என வகுக்கப்பட்டுள்ளது. குறுநாவல்கள் நாவல்களுடனேயே பட்டியல்களிற் காணப்படுகின்றன. அப்பகுப்பு முறையே இங்கும் மேற்கொள்ளப் படுகின்றது. கவிதை நாடகங்கள், கவிதைக்குள் அடங்குபவையாகக் கொள்ளப்படாது, நாடகத்தின்பாற் படுபவையாகக் கொள்ளப்படுவதே முறையாகும். அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தினரின் பட்டியலில் மேற்கொள்ளப்பட்டுள்ள இம்முறைமையே பொருத்தமானதென்பது பிற சர்வதேசிய நூல்பட்டியல்களைப் பார்க்கும் பொழுது புலனாகின்றது. (இலக்கிய வடிவம் ஒன்றின் பண்பும் பணியும் பற்றி இரசிகர்கள் கொண்டுள்ள கருத்துக்கள் நூல் விவரத்தையே எத்துணை பாதிக்குமென்பதற்கு இது உதாரணமாகும்).

இத்துறைகள் ஒவ்வொன்றிலும் முழுக்காலப் பிரிவிலும் வந்த நூல்களின் தொகையை முதலிற் குறிப்பிட்டு விட்டு, அடுத்து அவற்றை 1948 முதல் 1955, 1956 முதல் 1965, 1966 முதல் 1970 என்று வகுத்து ஒவ்வொரு காலப் பிரிவிலும் வெளிவந்துள்ள நூல்களின் தொகை குறிப்பிடப்படும். 1948 முதல் 1970 வரையிலான காலப்பிரிவை இவ்வாறு வகுப்பதற்குப் பல முக்கியமான காரணங்கள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது, அரசியல் பற்றிய காரணமாகும். 1948 முதல் 1955 வரையுள்ள காலப் பகுதியில், அரசியற் சுதந்திரம் சமூக விழிப்பினையுணர்த்தும் சக்தியாகக் காணப் படவில்லை. முன்னர் நிலவிய குடியேற்ற நாட்டு முறைமையே அரசியலிலும் பொருளாதாரத்திலும் அதிகார வலுவுடைய ஆட்சிக் கோட்பாடாக விளங்கிற்று. அரசியலதிகாரத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் மக்கள் ஈடுபாட்டுக்கு முக்கிய இடமளிக்கப்படவில்லை. இக்காலத்தில் தேசியம் அரசியற் சித்தாந்தமாக முகிழ்க்காது இருந்தது. நாட்டின் இலக்கிய வளர்ச்சியை எடுத்துக் கொண்டாலும் இத்தகைய தேசியநோக்கின்மையை நாம் நன்கு காணலாம். அரசியலில் மக்கள் பங்கு பெயரளவில் நிலவிற்றெனினும், சமூக நிலையில் பொதுமக்கள் விழிப்புக் காணப்படவில்லை. மக்களின் பண்பாட்டினடியாக விழிப்பு ஏற்படாதிருந்த காலம் இது.

1956-இல் தொடங்கும் காலப்பகுதியில், இந்நாட்டில் முதன் முதலில் 'சமூகப்புரட்சி' ஏற்பட்டதென்பதை எவரும் ஒத்துக்கொள்வர். 1956-இல் தொடங்கும் புதியயுகம், பெ

ரும்பான்மை மக்களின் முன்னேற்ற காலமே என்று சிலர் கூறுவதுண்டு. இதற்கு எதிராக இரண்டு காரணங்களைக் காட்டலாம். ஒன்று 1948—1955-இல் சிறுபான்மை இனத்தினரின் கலை, பண்பாட்டுக்கு இடமளிக்கப்படாதிருந்ததாகும். சிறுபான்மையினருள் விதேசிய நெறியற்றுக் கிடந்தவர்கள் தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டனர். அப்படிக் கருதியவர்கள் அந்த அந்த இனத்தைச் சேர்ந்தவர்களே. தமிழ்க் கல்வி, தமிழ்க் கலைகள் பற்றிய தேசிய நிலைப்பட்ட விழிப்புணர்வு, 1948—55-இல் இருந்தது என்று எவராலும் கூறமுடியாது. இரண்டாவது, பெரும்பான்மைச் சமூகத்தினரின் விழிப்பின் காரணமாகச் சிறுபான்மை இனத்தவர்களும் விழிப்படைந்தனர். எனவே 1956-இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் தமிழ் பேசும் மக்களிடையேயும் முன்னர் காணப்படாத விழிப்பை ஏற்படுத்திற்று. இக் காலத்திலிருந்தே தமிழர்கள் தாமும் இலங்கையின் தேசிய இனக் குழுக்களில் ஒரு பிரிவினர் என்பதையுணர்ந்து செயற்பட்டனர். மேலும் சிங்கள மக்களின் மொழிக்கும் பண்பாட்டுக்கும் அவர்களது வாழ்க்கையில் அளிக்கப்பட்ட முக்கியத்துவம், தமிழ் மொழிக்கும் பண்பாட்டுக்கும் தமிழினத்தவர் வாழ்க்கையில் முக்கிய இடம் வழங்கப்பட்டது. சிங்கள மொழி மூலக் கல்வி தமிழ்மொழி மூலக் கல்விக்கு வித்திட்டது. சிங்களத்தை அரசாங்க மொழியாக நெறியாக ஏற்படுத்திய சட்டத்தின் பயனாக, தமிழ்ப் பிரதேசங்களின் ஆட்சிக்குத் தமிழ் மொழி முக்கியமாக்கப்பட்டது. இவ்வாறு சகல துறைகளிலும் தமிழ் இடம்பெறத் தொடங்கியதால், தென்னிந்தியத் தமிழரிலும் பார்க்க இலங்கைத் தமிழர் சில துறைகளில் முன்னேற்றமடைந்தனர். தாய்மொழியில் உயர் கல்வி, பயிற்றப்பட்டமையைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

1956-இல் தொடங்கிய இப்புதிய அரசியல் வளர்ச்சி, 1965-இல் தடைப்பட்டது. தேசிய உணர்வு வெளிப்பாட்டின் ஆரம்ப காலத்திற் காணப்படும் — தவிர்க்கமுடியாத மிகையார வாரமும், புதிய இன்னல்களுமே தேசியவாதத்தின் உண்மையான சொரூபமெனத் தப்பாகக் கணக்கிடப்பட்டபடியால் (அவ்வாறு தப்பாகக் கணக்கிடப்படுவதும் வரலாற்றுப் பண்புகளில் ஒன்று) பழைமையைப் பேணுவதற்கான அரசியற் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது. பழைமையான நட்புறவைப் பேணுவதே தேசியம் என்ற கோட்பாட்டினடிப்படையில் அரசியல் இணக்கங்களும் ஆட்சியமைப்பும் அமைந்தது. எனவே எவ்வாறு நோக்கினும் 1965 ஒரு முக்கிய கட்டமாகவே அமைந்தது.

கலை, இலக்கியத் துறையைப் பொறுத்தமட்டில், 1956 மிக முக்கியமான ஒரு காலவரை நிலை என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வர். 1948—55-இல் கலை, இலக்கியத்துக்கு முக்கியத்துவமளிக்காததனாலேயே (அதாவது தேசியப் பாரம்பரியத்து முதலிடம் கொடுக்காததனாலேயே) 1956 உட்புரட்சி ஏற்பட்டதென்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். சிங்கள மக்களின் முன்னேற்றத்தில் 1956-க்கு எத்துணை முக்கியமுண்டோ, அத்துணை முக்கியம்

தமிழ்பேசும் மக்கள் வாழ்விலும் உண்டு. தமிழ் பேசும் மக்கள் என்ற அரசியற் கோட்பாடு தோன்றியதே 1956-க்குப் பின்னரே.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியை எடுக்குமிடத்தும், 1956 முக்கியமான இடம் பெறுகின்றது. ஒரு தசாப்த காலமாக ஈழத் தமிழிலக்கியத்தின் உந்து சக்தியாக (நேரடியாகவும் எதிர்மறையாகவும்) விளங்கிய முற்போக்கு இலக்கிய இயக்கம் இக்காலத்திலேயே தோன்றி வளர்ந்தது. 1956-க்குப் பின்னர் அது முழுமூச்சுடன் தொழிற்படத் தொடங்கிய பொழுது, 'ஈழத்திலக்கியம்' என்ற குடைக்கீழ் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் யாவரையும் அது ஒன்றுபடுத்திற்று. 1963 வரை அவ்வியக்கமே ஈழத் தமிழிலக்கியத்தின் முதன்மைச் சக்தியாக விளங்கிற்று. அரசியல் நிலைபாடு கொண்ட அவ்வியக்கத்தின் பண்பும் பணியும் துல்லியமடைய அடைய, இலக்கியப் பிரச்சினை ஈழத்திலக்கியம் என்ற பொது நிலையிலிருந்து விடுபட்டு, யதார்த்தம், தேசிய இலக்கியம் என்பன பற்றியதாக மாறிற்று. தேசியத்தின் முதல் விழிப்பில் ஒன்றுசேர்ந்த ஈழத் தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் ஆர்வ வேகங் குறைய அரசியற் காரணங்களால் பிரியத்தொடங்கினர். (முற்போக்கு இலக்கிய இயக்கம் எத்துணை அரசியற் சார்புடையதாகவிருந்ததோ, அத்துணை அரசியற் சார்புடையதாகவே முற்போக்கு விரோத இயக்கமுமிருந்தது. அரசியற் கோட்பாடொன்றை எதிர்ப்பதும் அரசியல்தான்) ஏறத்தாழ இதே வேளையில், முற்போக்கு இலக்கிய இயக்கத்தினரிடையேயும் அரசியல் வேறுபாடுகள் ஏற்பட்டன. இவ்வேறுபாடு அடிப்படைக் கொள்கைகளில் ஏற்பட்ட வேறுபாடு அன்று. செயல்வேகம் செயல்நோக்கு, என்பதைப் பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக அவ்வணிக்குள் பிளவேற்பட்டது. உட்பிளவும், வெளிப்பிரிவும் இயக்கத்தைத் தாக்கவே, இலக்கிய வளர்ச்வேகம் குன்றிற்று. இலக்கிய வரலாறும் அரசியல் வரலாறும் இணைத்தன. இரண்டிலும் 1965 இன்னொரு முக்கிய கட்டமாயிற்று.

1956 முதல் 1965 வரையிலான இக்காலகட்டமே ஈழத் தமிழிலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டமாகும். காலத்திற்கேற்ற மனிதர்கள் தோன்றுவார்கள் என்பதற்கிணங்க, இக்காலகட்டத்தில், பலரின் தனிப்பட்ட செயல்திறனாலும் தீட்சண்ய புத்தியாலும் இலக்கிய இயக்கம் ஓங்கி வளர்ந்தது. தேச முன்னேற்றம் பற்றிய அரசியற் கருத்து வேறுபாடுடையோர், ஒருமைப்பட்ட இலக்கிய (தேசிய) உணர்வினால் ஒருமித்துச் செயலாற்றிய காலம் அது. உண்மையிலேயே பண்டிதரும் (அதாவது தமிழ்ப் புலமைக்குப் பரீட்சைச் சான்று வைத்திருந்தோரும்) 'பாமரரும் (அத்தகைய புலமைச் சான்று இல்லாத, அதுகாலவரை தமிழ் இலக்கியத்தைப் பற்றிய உணர்வில்லாத பாமர குடும்பங்களைச் சேர்ந்த ஆனால் ஆக்க இலக்கியத்திறனும் நுண்ணுணர்வும் கொண்ட எழுத்தாளர்களும்) ஒன்றுபட்டுக் கடமையாற்றிய காலம் அது. இலக்கியத்தின் பண்பு பணிபற்றிய கோட்பாடுகள் விரிவடைந்த காலம் அது. யாவற்றுக்கும் மேலாக இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையான அரசியல் சமூக நிலைப்பட்ட உந்து சக்தி

யொன்று வேண்டுமென்பதை யாவ ரும் உணர்ந்த (வெளிப்படை யாக ஒப்புக்கொள்ளாவிடினும்) காலம் அது.

1965-இல் மாற்றம் ஏற் பட்டது. கருத்துக்கள் எவ்வாறு காலத்தை மாற்றுவதற்கான முதற் சக்தியாக அமைகின்றன வோ அவ்வாறே அவை காலத் தின் நடைமுறைகளின் அடியா கவும் தோன்றுகின்றன. அதா வது ஒரு குறிப்பிட்டகால நடை முறைகள் தொடர்ந்து நிலைப் பதன் மூலம், சில கருத்துக்களை, சமூக நியதிகள், நன்மை தீமை பற்றிய கோட்பாடுகளை, வாய்ப் பானவை வாய்ப்பற்றவை என்ற திருஷ்டாந்தங்களை மக் கள் மனதில் நிலைபெறச் செய்து விடுகின்றன. இவை காலத்தின் நடைமுறைக் கருத்துக்களாக எடுத்துக் கூறப்படுவது வழக்கம். ஆனால் மாற்றத்தின் அவசியத் தை உணர்த்தும் முற்போக்குக் கருத்துக்களுக்கும், நடைமுறைச் செல்வாக்கால் வளரும் கோட் பாடுகளுக்கும் ஏற்படும் மோதல் உண்மையில் அடிநிலையில் நடை பெற்றுக்கொண்டிருக்கும் சமூக முரண்பாட்டின் வெளித்தோற் மே. புதிய சமுதாய அமைப்பை வேண்டும் கருத்துக்களை இந்த வர்த்தனமான நிலைபாட்டுக் கருத்துக்கள் எதிர்ப்பது வழக் கம். ஆனால் இந்த வர்த்தமானக் கருத்துக்கள் சமூகத்தில் ஏற்பட் டுக்கொண்டிருக்கும் (கண்ணுக் குப் புலனாகாத) மாற்றங்களைக் கணக்கெடுப்பதில்லை. இதனால் இக் கருத்தையுடையோர் படிப் படியாக மாற்றத்தையே எதிர்க் கும் நிலையினராகிவிடுகின்றனர். மாற்றத்தை எதிர்ப்பவர்கள் மாற்றத்தை விரும்புபவர்களை விட வன்மையான முறையில் தமது கருத்துக்களை நிலைநிறுத் தப் பார்ப்பார். அவ்வாறு நிலை நிறுத்த முனையும் பொழுது, அவர்கள் தமது மாற்றவிரோ தக் கருத்துக்களுக்குப் புதிய வியாக்கியானங்கள், விளக்கங் கள் (இது உண்மையில் மாரீச வாதமே) கொடுப்பது வழக் கமே. இந்தப் பண்பிற்கியை யவே, 1965-இல் ஏற்பட்ட மாற்றத்துக்குத் தவறான புதிய விளக்கங்களும், வியாக்கியானங் களும் கொடுத்து தமது முன் னேற்ற விரோதநிலையை விளக் கப்பார்த்தனர். இதன் அடி உண்மையை அறியாத பலர் முன்னேற்ற விரோதக் கோட் பாட்டை, சிறந்த முன்னேற்றக் கோட்பாடான நம்பித் தடுமா றுவர். தடுமாறுகின்றனர். மக் களே போல்வர் கயவர்!

மாற்றகாலத்தில், தீர்க்க மான கருத்துத் தெளிவின்மை யால் ஏற்படும் தவறுகள், மாற் றத்தின் புதுமை, அப்புது நிலை தோற்றுவிக்கும் புதிய பிரச்சி னைகள் ஆகியன காரணமாகப் புதுமைநெறியைப் பலர் வெறுப் பது வழக்கம். ஆனால் புதுமை சில வெற்றிகளை ஏற்கனவே ஈட்டிக் கொண்டால், அவற்றை விட்டுவிட்டுப் பின்நோக்க முடி யாத நிலைமையும், புதுமையை மனம் விரும்பி ஏற்காத ஒரு நிலைமையும் ஏற்படும். இந்நிலை யில் முற்போக்கு நெறி ஸ்தம் பிக்கும். முற்போக்கின் ஸ்தம் பித நிலையே பிற்போக்கின் பெ ருத்த வெற்றியாகக் கருதப் படும்.

(வளரும்)

சிறுகதை

# வெறி தீர்ந்தது

திக்வெல்லை கமால்

லாம்பைச் சற்றுத் தூண்டி சுருட்டைப் பற்றவைத்து இரண்டு மூன்று 'தம்' இழுத்தூதிவிட்டு முன் படிக்கட்டில் போடப்பட்டிருந்த வாங்கில் அமர்ந்துகொண்டான் காஸிம். மாலைவேளையில் தேநீருக்குப்பின் ஆறுதலாக ஆறுதல் சுருட்டொன்று புகைப்பதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

மூன்று உயிர்களுக்கும் இரை போடும் அந்தக் குச்சில்கடைதான் அவர்களது ஜீவநாடி. சனநடமாட்டமற்ற பகுதியில், நீண்டுவளைந்து செல்லும் கழிமண் பாதைக்கருகில், அது அமைந்திருந்த போதிலும் நாலைந்து வருடமாக இயங்கி வருகிறதென்றால் அதற்குப் பிரத்தியேகமான சிறப்பியல்புகள் இருக்கத்தானே செய்யும்!

'சூரியகஹவெல' பகுதியில் வாழும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் காய்கறிச் சாமான்கள் வாங்குவதென்றால் சற்றுத் தூரம் செல்லத்தான் வேண்டும். அதுவும் மழை நாட்களிலும், பொதுவாக இரவு நேரங்களிலும் போவதென்றால் கொஞ்சம் சிரமம்தான். இந்த உத்தேசங்களின் அடிப்படையில் எழுந்ததுதான் அக்கடை.

நாளாந்தம் அதிகாலையில் 'வலஸ்கல' தினச் சந்தைக்குப் போய்வந்தால் முற்பகல் பத்து மணிக்கெல்லாம் மாட்டுவண்டியில் பலாக்காய், தேங்காய், கீரை, கறிவகைகள் எல்லாம் வந்துவிடும். அந்த வேளையில் அக்கடையில் கலகலப்பு! கூடவே அவனது மனைவியும் ஒத்துழைப்பதால் குறிப்பாக முஸ்லிம் பெண்களும் அக்கடையை நாடுவதை விரும்புவார்கள் தானே?

புகைந்து முடிந்த சுருட்டின் கடைசித் 'தம்'மை இழுத்தூதி

ஒருமுறை இருமித் துப்பிவிட்டு சரிந்திருந்த சால்வையை சரிப் படுத்திக் கழுத்தில் போட்டுக் கொண்டு எழும்ப முனைந்தவன் மீண்டும் சற்றுத்தள்ளி அமர்ந்து கொண்டான்.

வழமையாக இரவு ஒன்ப தரை மணிபோல் பஸ்டிப்போ வில் வேலைசெய்யும் ஜினதாஸ போனபின்தான் அவன் கடையைப் பூட்டுவான். ஆனால் இன்றே இப்பொழுதே கடையைப் பூட்டிவிட்டு படுத்துக் கொண்டாலும் நல்லதுபோல் தோன்றியது காஸிமுக்கு!

இப்படி ஒரு மாதிரியான யோசனைகளுக்கெல்லாம் காரணம் காலையில் நடைபெற்ற சம்பவம்தான்!

நாற்பது வயதை அண்மிக் கொண்டிருந்த காஸிம் இது வரை எவருடனும் சண்டை சச்சரவுகளுக்குப் போகாவிடாலும், எந்த விஷயத்திலும் கண்டிப்பும் போலி கௌரவங்களுக் குத் தலைசாய்க்காது நேர்மை யான காரியங்களுக்கு ஆதரவு கொடுக்கும் தன்மை உடைய வனும்கூட!

இன்று காலை எட்டுமணி போல் அப்துல்காதர் முதலாளி அவரது கையாள் ஒருவனுடன் அப்பக்கமாக வருவதைக் கண் டதும் ஏதும் விஷேசங்கள் இருக் கவேண்டுமென நினைத்துக் கொண்டான். அதுபோல் அவர் கள் வந்து கடைக்குள்ளேயே புகுந்தபோது காஸிமுக்குப் பெரிய ஆச்சரியமாய்ப் போய் விட்டது. மற்றவர்களைப் போன்று அவருக்கு அர்த்தமற்ற இராஜ மரியாதைகளைச் செய்ய முனையாது, சும்மா முகமலர்ச்சி யுடன் மாத்திரம் நின்றுவிட் டான். பொதுவில் ஊருக்குப் பெரிய முதலாளியாகவும், மத அடிப்படையில் ஒருமுறை மக்கா சென்றுவந்து 'ஹாஜியார்' என்ற லேபிளையும் ஒட்டிக் கொண்டு அவர் செய்துவரும் அநியாயங்களையெல்லாம் அறிந் தும் ஊரவர்கள் அவரை கௌர வித்துக் கொண்டிருப்பதையெல் லாம் அவன் அறியாதவனல்ல!

'காஸிம் ஒனக்கு அடுத் தசல் புஞ்சிபண்டாவைத் தெரீம் தானே?'— தனது வேலைக்கார னொருவனிடம் கேட்பது போன்ற கம்பீரம்!

இதைக் கேட்டதுமே அவ னுக்கு விசயம் தெட்டத்தெளி வாகப் புரிந்துவிட்டது. 'ஓ...... அதுதான் அர்னேலிஸ் அப்புவின் மகனத்தானே செல்றீங்க' என்று சிரித்தபடி கேட்டான்.

'ஆ...ஆ... அந்த நாய்ப் பயல்தான்'

'என்னத்த அப்பிடிச் செல் லியீங்க. அவன் என்ற கூட்டா ளிதான்'

'அந்தக் கூட்டாளித் தன மெல்லாம் சீக்கிரமா உட்டுப் போடு. எங்களுக்கு தொரோ கம் செய்றவன்களோட என்ன கூட்டாளித்தனம்?'

அவருடன் நட்பில்லாதவர் களுடன் ஊரில் வேறு எவருமே ஒற்றுமையாக இருக்கக்கூடாது என்பது போன்றிருந்தது அப் பேச்சு. அதெல்லாம் அவரது பக்தர்களின் வழிபாடு. ஆனால் காஸிமைப் போன்றவர்கள்......

'அதுசரி மொதலாளி அவன் இன்றுவரேல எனக்கெந்த தொரோகமும் செய்யல்லயே. வேண்டிய நேரத்தில வேண்டிய ஒதவியச் செய்ருன்' என்று அவரது வேண்டுதலை நிராகரித் ததாகப் பதில் கொடுத்தான்.

அந்தக் கணத்தில் அவரது முகம் 'குப்' பென்று சிவந்து. சினம் பொங்கியபடி 'அப்ப அந்தச் சிங்களவன்கள்தான் ஒனக்கு நல்லம்போல' என்று மதப்பிரிவினையை இழுத்துப் போட்டு நிறுத்தினார்.

'சிங்களவனோ தமிழனோ, எங்களுக்கு ஒதவி ஒபகாரங்கள் செய்றதுபோல வேறுயாருவந்து செய்யப்போறான்கள்' அவரது முகத்திலறைந்தாற்போல சொன்னான்.

'ஹா... ஹ... மிச்சம் மிச்சம் பேச்சித் தேவில்ல. ஒன்னால தான் அவன் இண்டைக்கி இந்த நிலமைக்கி வந்திக்கிறான். இனிமே இந்தக் கடேல நிக்கிறதக் கண்டா உள்ளுக்கே வந்து அடிச்சிப்போடுவம்'—பின்னால் நின்று கொண்டிருந்தவரின் வீரக்குரல் இது.

'ஓ! அதையும் ன்ட ஏகண்ணால பாக்கத்தான் போற. திரும்பி கை, காலோட போக மாட்டியல்' தானும் அவர்களுக்குக் குறைந்தவனல்ல என்பதை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் சாரத்தையும் உயர்த்திக் கட்டிக்கொண்டான் காஸிம்.

இனியும் தாமதித்தால் நிலைமை மோசமாகிவிடுமே என்பதை உணர்ந்த அங்குகூடியோர் அவர்களை அமைதிப் படுத்தி அழைத்துச் செல்ல அதற்கிடையில் அப்துல் காதர் முதலாளி திரும்பி 'டே... பறநாய்! நீ இவ்வளவு பெருத்துப் பெய்த்தாய். ஓன்ட ஆச்சி, அப்பன் எங்கட ஊட்டில சட்டி முட்டி கழுகித் தின்று வளர்ந்ததுகள். நல்லா நெனச்சிக்கோ' என்று தங்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வைக் குத்திக்காட்ட நினைத்தார் போலும்!

'ஆ... அதுதான் அன்றைக்கும் இன்றக்கும் நாங்க கஷ்டப் பட்டுத்தான் தின்னிய... ரேஸ் புக்கி வெச்சி இல்லாட்டிக் கள்ளச்சாமான் வித்தித்தின்னல்ல' என்று எல்லோருக்கும் தெரிந்த மௌன இரகசியத்தை இனி என்ன நடந்தாலும் சரி என்ற எண்ணத்தில் போலும் உரத்த குரலிலேயே கூறிவிட்டான்.

நடுச்சந்தியில் வைத்து இப்படித் தன் மானத்தையே கழைந்துவிட்டானே என்ற வேதனை அவரை வெகுவாகப் பாதித்து விட்டது.

'டே! ஒன்ட வாய்க்கொழுப்புக்கு இன்றக்கே நல்ல மருந்து செய்யிறன் பாத்துக்கொ' தனது கடைசி எச்சரிக்கையையும் விடுத்துவிட்டு, முயற்சியில் தோல்விகண்டது போதாக் குறைக்கு அவமானத்தையும் சுமந்துகொண்டு நடந்தார் காதர் முதலாளி.

புஞ்சிபண்டாவும் காஸிமும் நீண்டகாலமாக நண்பர்கள். ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவிக்கொள்வதில் பின்நிற்ப தில்லை. ஒருவித கொள்கைப் பிணைப்பே இவர்களை நண்பர்களாக்கியது.

புஞ்சிபண்டா ஒரு சாதாரண விவசாயி. அரிவு வெட்டுக்குப்பின் மீண்டும் நெல்விதைப் பையொட்டி அவனது வயலுக்கு முள்ளுக்கம்பி அடிப்பதற்காக சென்றவாரம் காதர் முதலாளியின் இரும்புக் கடைக்குச் சென்றபோது அவனுக்கு முள்ளுக்கம்பி இல்லையென்று விட்டார்கள். பின்பு, அங்கே ஒழித்துவைத்துக் கூடியவிலைக்கு விற்பதை அறிந்து விலைக்கட்டுப் பாட்டு அதிகாரிகளுக்கு கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொடுத்

துவிட்டான். இச்செய்தி கேள்விப்பட்டதும் அவனை முதன் முதலில் பாராட்டியவன் காஸிம் தான்.

அதைத் தொடர்ந்து அவனை அடிப்பதற்குச் சிலரை ஏவிவிட்டு, அதுவும் முறியடிக்கப்பட்டபோது, காஸிமின் ஒத்துழைப்பின்றேல் இதைச் சாதிக்க முடியாது என்ற முடிவில் அதற்கும் முனைந்து படு தோல்வி அடைந்தபின் அவரின் கோபவெறி இப்பொழுது காஸிமின்மேல் திரும்பியுள்ளது.

'இந்தாங்கொ ஆறுமணி பிந்தீட்டுது லைட்டைப் பத்த வைங்க' என்று மண்ணெண்ணெய் போத்தலை நீட்டியபடி உள்ளேயிருந்து மனைவி வந்த போது பெருமூச்சு விட்டபடி வாங்கிலிருந்து எழுந்தான்.

'லைட்' டைத் தூக்கிவிட்டு சாமான் 'பக்கி' யைப் பார்த்தவன் 'மலீகா! இந்த தேங்கா கொஞ்சமும் பழசாகிட்டு. குறைச்சல் விலைக்காவது வித்துப்போடுங்க' அதைத் தொடர்ந்து,

'ராவக்கி மய்யோர் (மரவள்ளி) க் கிழங்கு கொஞ்சத்தேம் அவிச்சி, புளித்தண்ணியொன்டும் சமச்செடுத்தா எப்பிடி?' என்று ஆலோசனை கேட்க,

'எதுசரி ஒங்குளுக்கு புரியமான மாதிரி' அதையே ஆமோதிப்பதாக கூறிவிட்டு உள்ளே சென்றாள். வீடு, கடை, சமயலறை எல்லாம் ஒன்றுக்குள் ஒன்றுதானே!

கடைப் படியிலிருந்து பாதைக்கிறங்கி இருபுலமும் எட்டிப்பார்த்தபோது அங்கே வாகனமொன்று வருவது தெரிந்தது. அந்த ரோட்டில் ஏதும் வாகனங்கள் வருகிறதென்றால் அதிசயந்தான். வாகனம் நெருங்க நெருங்க அது ஜீப் வண்டியென்பதை அறிந்ததும் 'எங்காவது சூதுகீது விளாடிறான்களாக்கும்' என்று எண்ணிக்கொண்டே திரும்பினான்.

என்ன ஆச்சரியம்! கடையெதிரே வந்து ஜீப் நின்றதோடு நாலைந்து பொலீஸ்காரர்கள் 'தடபட' வென்று பாய்ந்து கடையின் நாலுபுறமும் சுற்றி எதையோ தேடத்துவங்கி விட்டார்கள்.

காஸிமுக்கு நடுக்கத்துடன் வியர்த்துக் கொட்ட, எதுவுமே புரியாமல் மரத்தூணைப் பற்றிப் பிடித்துக்கொண்டான். அக்கம் பக்கத்தாரெல்லாம் நொடிப் பொழுதில் அங்கே நிறைந்து விட்டார்கள்.

இடப்பக்கக் கிடுகு வேலிக்குள்ளிருந்து பொலீஸ்காரனொருவன் கடதாசியில் சுற்றிய பார்ஸலொன்றை இழுத்தெடுத்துக்கொண்டு வந்து விரித்துக் காட்ட, இன்ஸ்பெக்டர் உறுமிக்கொண்டு வந்து காஸிமின் வயிற்றுப்பக்க ஸாரமடிப்பை இறுக்கிப் பிடித்து உலுக்கி:

'பொறுவட கடயத்தா கென கன்சா விகுநனவ நேத பங்?' (பொய்க்குக் கடையொன்று போட்டுக் கொண்டு கஞ்சா விக்கிறாய் என்ன?)

'நே......நே...... மகத்தயா' (இல்லை... இல்லை... ஐயா)

'நகினவா கிஹில்ல ஜீப் ஏகே' (ஏறுபோய் ஜீப்பில்)

அவன் ஊமைபோல் போய் ஏற இரைந்துகொண்டி ஜீப் கிளம்பியது.

'ஐயோ! ஆண்டவனே இதென்ன 'நஸீப' ன்? அந்த 'ஹர' பாப் போனவனுகளட தலைல இடிபுல...' என்று சகிக்க முடியாத வேதனையில் காஸிமின் மனைவி ஒப்பாரிவைக்க போதாக் குறைக்கு நான்கு வயதுச் சிறுமியின் பேரழுகையும் சேர்ந்து கொண்டது. ★




கிருஷ்ண சந்தர்

# இந்திய எழுத்தாளரை எதிர்நோக்கும் கடமைகள்

பிற்போக்கான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை முறியடிக்க வேண்டும் என்பதை நோக்கமாமக் கொண்ட இந்திய முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் முதற் கட்டம் முடிவடைந்து விட்டது. அந்தச் சமயத்தில் எங்களுக்கு இதர பல வர்க்கங்களின்—இன்றைய இந்தியாவை ஆளும் வர்க்கங்களின் — துணையும் வேண்டியிருந்தது. ஆனல்; இப்போது நிலைமை மாறியுள்ளது. இன்று முற்போக்கு இலக்கியம் மேலும் முன்னேற வேண்டும்; விலைபேசும் பூர்ஷ்வா வர்க்கத்தை அம்பலப்படுத்த வேண்டும். அந்தப் பணியானது முற்போக்கு இலக்கியத்தில் மேலோங்கி நிற்க வேண்டிய போக்கைத் தீர்மானிக்கும்; அந்தப் பணியை ஆற்றுவதற்கு இந்திய எழுத்தாளர்களாகிய நாங்கள் மேன்மேலும் எதார்த்தத்தையும் சோஷலிசத்தையும் நோக்கிச் செல்லவேண்டும்.

அதைச் செய்து முடிப்பதற்கு, இன்றைய காலகட்டத்தில் எமது நண்பர்கள் யார் பகைவர்கள் யார் என்பதை நாங்கள் அவசியம் கண்டுபிடிக்க வேண்டும். இது மிக முக்கியமானது. ஏனெனில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நாங்கள் போராடிக் கொண்டிருந்தபோது எங்கள் நண்பர்களாக இருந்த பலர், இன்று எதிரிகளாக மாறியுள்ளனர்.

### சோஷலிச எதார்த்தவாதம்

முற்போக்கு எழுத்தாளர்கள் இந்தியத் தொழிலாளரின் வாழ்க்கையைக் கூர்ந்து ஆராய வேண்டும்; ஏனெனில், சோவியத் யூனியனின் உதவியுடன் இந்தியாவின் தொழில் துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்திய எழுத்தாளர்கள் பொது

மக்களுடன் கலந்து பழகி, அவர்களது வாழ்க்கை நிலைகளை ஆராய வேண்டும். கிராமப்புறத்தில், இந்திய விவசாயிகளின் வாழ்வில் பற்பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன; அங்கும் இரு பிரிவுகளைக் காண்கிறோம். ஒரு பிரிவினர், பெரிய பண்ணையைக் கொண்ட பணக்கார விவசாயிகள்: மற்றொரு பிரிவினர், சிறு விவசாயிகள்; இவர்கள் மிகவும் ஏழைகளாகவும், பெரும்பாலும் நிலமற்ற விவசாயக் கூலிகளாகவும் உள்ளனர். அவர்களது வாழ்க்கை நிலைகளை நாங்கள் ஆராய வேண்டும்; ஏனெனில் அடுத்துவரும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் இந்தியக் கிராமப்புறங்களில் மிகப் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படும்.

நான் முன்பு கூறியதைப் போல, பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஓர் கலாசார ஐக்கிய முன்னணி இந்தியாவில் இருந்தது. ஜனநாயகம், ஜனநாயக மிதவாதம் ஆகியஇலட்சியங்கள் அப்போது அதிகமாக வலியுறுத்தப் பட்டன; ஆனால், இப்போது நாங்கள் சோஷலிச எதார்த்தவாதத்தை அதிகமாக வலியுறுத்த வேண்டும். அதற்காக நாங்கள் சோவியத் இலக்கியத்தைக் கற்க வேண்டியது அவசியம். ஏனெனில், இந்திய முற்போக்கு இலக்கியத்தின் எதிர்காலப் போக்குகளை உருவாக்க அது இன்றியமையாதது,

கிராமப்புறங்களில் போராடும் எமது விவசாயிகளிடையிலும், பணக்கார விவசாயிகளின் நிலங்களில் பாடுபடும் எமது நிலமற்ற விவசாயிகள், உழைக்கும் மக்களிடையிலும், ஒரு செயலூக்குமுள்ள கதாநாயகன் தோன்றி வருகிறான். அந்தச் செயலூக்கமிக்க கதாநாயகன் அங்கு பிறந்தான்; அவன் இன்று போராடிக் கொண்டிருக்கிறான். இந்தப் போராட்டத்தை நாங்கள் ஆராய வேண்டும்; அந்தச் செயலூக்கமுள்ள கதாநாயகனை எமது நாவல்களிலும், சிறுகதைகளிலும் சித்திரிக்க வேண்டும்; இதுவே எமது பிரதான கடமையாகும்.

### முற்போக்கு விஷயங்கள்

இந்திய, பாகிஸ்தானி மக்களிடையே அமைதி நிலவுதல், இந்தோ—சீனாவில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு, தங்களது சுதந்திரத்திற்காக அரபு மக்கள் நடத்தும் நியாயமான போராட்டம்—இப்படிப் பட்ட விஷயங்களில் இந்திய எழுத்தாளர்கள் அண்மையில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர்.

நான் கிராமப்புறத்திற்குச் சென்று அங்கு நிகழும் மாற்றங்களை ஆராய விரும்புகிறேன்: குறிப்பாக, நிலமற்ற விவசாயிகளைப் பற்றியும், பணக்காரர்களுக்கு எதிராகப் போராடும் ஏழை விவசாயிகளைப் பற்றியும், நன்கு தெரிந்து கொள்ள விரும்புகிறேன்; இந்த மாற்றங்களைப் புரிந்து கொண்டு, அவற்றைப் பற்றி எழுத விரும்புகிறேன். ★



# மூளை + இல் – ஆதவன்

அவனுக்கு அடிக்கடி என்னவோ செய்தது. ஆஸ்பத்திரிக்குப் போனான். அவனைச் சோதித்த டாக்டர்கள் மூளையில் வருத்தம் என்று ஆபரேஷன் தான் வழி என்றார்கள். அதற்கு அவன் சம்மதித்தான்.

குறிப்பிட்ட தினத்தில் அவனை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு வந்தார்கள். டாக்டர்கள் அவன் தலையைக் கிறிப் பார்த்தபோது மூளையில் ஏற்பட்ட கோளாறுகள். மூளையை வெளியிலெடுத்து சிகிச்சை செய்துகொண்டிருந்தார்கள். சிகிச்சை பூர்த்தியாகும்வரை தலையைத் தற்காலிகமாக மூடித் தைக்கவேண்டியயிற்று. அது மிகவும் சிக்கலான 'கேஸ்' என்பதால் நீண்டநேரம் எடுத்தது. டாக்டர்களும் சளைக்காமல் ஆபரேஷனை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தார்கள்.

மூளை தயாரானபின் தலைக்குள் வைத்துத் தைத்துவிடலாம் என்று பார்த்தபோது டாக்டர்கள் பதறிப்போனார்கள். அவர்களின் கை கால்களெல்லாம் உதறலெடுத்தன. தங்கள் வைத்திய வரலாற்றில் இப்படியொரு சம்பவம் நடந்ததில்லை.

என்னதான் நடந்துவிட்டது?— அந்தப் 'பேஷ'ண்டைப் படுக்கையில் காணவில்லை.

ஆஸ்பத்திரி எங்கும் தேடிவிட்டார்கள். அவன் அகப்படவேயில்லை. எனவே அவனது மூளையைப் பாதுகாத்து எடுத்து வைத்தார்கள்.

இதுநடந்து பல வருடங்களின்பின் ஒருநாள் ஆபரேஷன் செய்த டாக்டர் ஒரு கிளப்பில் தற்செயலாக ஒருவனைக் கண்டு பாய்ந்துபோய் பிடித்துக்கொண்டார். அவன் முன்பு ஆபரேஷன் செய்துகொள்ளவந்த அதே ஆள்தான். ஊர், பெயர் விசாரித்தபோது அவனேதான் என்பது ஊர்ஜிதமாயிற்று.

இன்னமும் நீர் இருக்கிறீரா? உம்மிடம் மூளை இல்லையே—என்றார் டாக்டர். இதைக்கேட்டு அவனுக்கு அசாத்தியக் கோபம் வந்துவிட்டது. பண்பாடு. கலை, கலாச்சாரம், பாரம்பரியம் என்றெல்லாம் முழங்கிவிட்டு 'உமக்குப் பேசக்கூட தமிழ் நாகரிகம் தெரியவில்லையே' என்று ஒரு போடு போட்டான்.

டாக்டர் அறிவு பூர்வமாக எல்லாம் விளக்கி அவன் தலையில் மூளை இல்லை என்பதையும் கூறித் தன்னுடன் வந்தால் மீண்டும் மூளையை வைத்து தைத்துவிடுவதாக உறுதியளித்தார். அவன் அதற்கு இனி அவசியமில்லை என்றுசொல்லிவிட்டான்.

கடைசியாக இப்போது என்னதான் செய்கிறீர் என்று டாக்டர் விசாரித்தார்.

'நான் ஒரு தமிழ்ப்பட டைரக்டர். மை பாஸ் டைம் இஸ் பொலிடிக்ஸ்' ★

நடிகர் விஸ்வநாதன் சொல்லக் கேட்டவர் மு. க.

பாலமுனைக் கிராமத்தில்

# 'பூஞ்சோலை எழுத்தாளர் மன்ற'

## ஓராண்டு நிறைவு விழா

கடந்த 12-8-71-இல் பாலமுனை (கல்முனையிலிருந்து 16 மைல் இருக்கும்) என்னும் கிராமத்தில் பூஞ்சோலை எழுத்தாளர் மன்றத்தின் ஓராண்டு நிறைவு விழா நடைபெற்றது. 'பூமாலை' என்னும் கையெழுத்துப் பிரதி வெளியீட்டு நிகழ்ச்சியும், 'இலக்கியம் யாருக்காக' என்னும் கருத்தரங்கு நிகழ்ச்சியும், 'புதியதோர் உலகம் செய்வோம்' என்னும் கவியரங்க நிகழ்ச்சியுமாக மொத்தம் மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

'இலக்கியம் யாருக்காக?' என்னும் தலைப்பிலான கருத்தரங்கிற்குக் கவிஞர் மருதூர்க் கனி அவர்கள் தலைமை வகித்தார்கள். நாவலாசிரியர் இளங்கீரன், அ. ஸ. அப்துஸ்ஸமது, கவிஞர் சண்முகம் சிவலிங்கம் ஆகிய மூவரும் பங்கு பற்றினர்கள். அ. ஸ. அவர்கள், 'இலக்கியம் படைப்பவனுக்காக, அவனது ஆத்ம திருப்திக்காக மட்டுமே' என ஆணித்தரமாக எடுத்துக்கூறினர். தன் பேச்சு முடிந்ததும் 'ஏதோ உடம்பு சரியில்லை' என்று எழுந்து ஓடி விட்டார்; (தமது கருத்துக்கு எதிர்க்கருத்துக்கள் பலமாக எழும் என்பதை முன்னரே அறிந்து கொண்டார் போலும்) அடுத்துப் பேசிய கவிஞர் சிவலிங்கம் அவர்களும் இளங்கீரன் அவர்களும் 'இலக்கியம் மக்களுக்காக' என்னும் கருத்தை வலியுறுத்திப் பேசினர்கள்; 'சமூகப் பிரஜ்ஞை இல்லாத இலக்கியப் படைப்புக்களால் பிரயோசனம் இல்லை' என்று இளங்கீரன் அடித்துப் பேசினர். அ. ஸ. வுக்கு நல்ல தாக்குதல். அவர் விரும்பியிருந்தால் நின்று மற்றவர்களுடைய கருத்துக்களையும் கேட்டிருக்கலாம்.

உண்மையில் அ. ஸ. பேசியது முரண்பட்ட கருத்துத்தான். 'ஆத்ம திருப்திக்காக' என்றல் ஏன் நாங்கள் படைப்புக்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கவேண்டும்? ஏன் நாங்கள் வானொலி மூலமாகவோ, நாடகமாகவோ அரங்கேற்ற வேண்டும்? கையெழுத்துப் பிரதியாக எழுதி வைத்துப் படித்து ரசிக்கலாமே...? என்ற எண்ணம் எனக்குள் எழுகிறது. சர்ச்சைக்குரிய விடயத்தை அ. ஸ. மழுப்பிவிட்டிருக்கிருர். எழுதப்புகுந்த ஆரம்பத்தில் ஒருவகை மகிழ்ச்சி

ஆத்ம திருப்தி ஏற்படுவது இயல்பு. ஆனால் போகப்போக ஒரு இலட்சியமாக, சமுதாய மறுமலர்ச்சிக்குப் பாடுபடும் ஒரு தொண்டாக, மக்களுக்காக என்னும் நிறைவே படைப்பாளிக்குத் தோன்றுகிறது.

சரி, இனி கவியரங்கிற்கு வருவோம். கவிஞர் மருதூர்க் கொத்தன் அவர்கள் தலைமையில், 'புதிய தோர் உலகம் செய்வோம்' என்னும் தலைப்பில் செல்வி நோ. இராசம்மா (கல்முனைக் கலைராஜி), குறிஞ்சி வாணன், சம்மாந்துறை அஸீஸ், அன்புடீன், பாலமுனை பாறூக், புதியதலாவை பாருக் ஆகியோர் கலந்து கொண்டனர். செல்வி நோ. இராசம்மா, 'புதியதோர் உலகம் செய்வோம் — ஈழத் தமிழ் மொழி ஓங்க இலக்கியம் படைப்போம்' என்று தமது கவிதையை ஆரம்பித்தார். இவரது கவிதையில்,

'உற்பத்தி பெருக்கி உறுதியைச் சேர்க்கும்
உழவன் மகளுக்கு உயர்ந்த படிப்பில்லை
உயர்ந்த வாழ்வில்லை! உயர்ந்த எண்ணமில்லை'

நல்லது சொன்னாய் ஆனந்த வல்லி
ஏழ்மை எமை வாட்டும் கொடிய துன்பமடி
இந்த நிலைமாறி எங்கும் சம வாழ்வு
ஈழம் பெறுவதுதான் புதிய உலகமடி'

என்று வருகின்ற வரிகள் தலைவர் உட்பட அவையோர் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தன. வானொலிக் கவியரங்கம் ஒன்றில்,

'கல்முனைச் செல்வி நோ. இராசம்மா
நல்ல கவிதை பல நாளும் தருவாள்
வல்ல தமிழ்க் கவிதை வழங்கும் ஔவை
அவள் கவிதை கேட்போம'

என்று கவிஞர் இ. சிவானந்தன் குறிப்பிட்டதை இக்கவியரங்கம் உறுதிப்படுத்திற்று எனலாம். கவிஞர் குறிஞ்சிவாணன் மற்றும் ஏனையோர் சீதனப் பிரச்சனை, வட்டிக்கொடுமை ஆகியவைகளை மையமாக வைத்துப் பாடினார்கள்.

பாலமுனை என்கின்ற அழகான கிராமத்தில் 'பூஞ்சோலை எழுத்தாளர் மன்றம்' ஆற்றி வரும் இலக்கியப்பணி இலக்கிய ஆர்வம்கொண்ட சகலரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆள்த்தும். ★


தரமான புகைப் படங்களுக்கு

SATKUNAMS

ஸ்ருடியோ

51, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



# ஒரு படைப்பாளியைப் பற்றி இன்னொரு சிருஷ்டியாளனின் பார்வை

டொமினிக் ஜீவா

நானொரு விமரிசகன் அல்ல; ஆனால், படைப்பாளி ஒருவன் விமரிசகனாக இருக்கக் கூடாது என்பது எனது வாதமுமல்ல.

ஒரு படைப்பாளியைப்பற்றி இன்னொரு சிருஷ்டியாளன் விமரிசிப்பதோ அல்லது கருத்துச் சொல்வதோ இலக்கிய உலகில் நடைபெறாத சம்பவமுமில்லை. பலவித கோணங்களில் உலக எழுத்தாளர்கள் தமது கருத்துக்களையும் எதிர் எழுத்தாளர்களின் அபிப்பிராயங்களையும் மோத விட்டுள்ளனர். இதனால் இலக்கியச் செழுமை ஏற்படுமே தவிர, இலக்கிய நட்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

கோஷ்டித்தன்மை வாய்ந்த அல்லது தனி மனிதனைப் புண்படுத்தக்கூடிய கீழ்த்தரமான கருத்துக்களோ தாக்குதல்களோ ஒரு தலைப்பட்சமான அபிப்பிராயங்களோ இலக்கிய விவாதத்திற்கு ஊறு விளைவித்து விடும் என்ற அச்சத்தை மனதில் கொண்டுதான் இந்தக் கருத்துக்களைச் சொல்ல முற்படுகின்றேன்.

ஒரு தரமான எழுத்தாளன் மீது கண்டபடி சேற்றை அள்ளி வீசும்போது நமது கைகளிலும் சேறு அப்பத்தான் செய்யும் என்ற நடைமுறை உண்மையை முதலில் ஒப்புக்கொண்டு, இதே சேறை நம்மீது சிலர் எறிய முயலலாம் என்பதையும் புரிந்து கொண்டேதான் இத் தொடரை ஆரம்பிக்கின்றேன்.

எனவே இது ஒரு கருத்துப் போராட்டமே தவிர, யார் மீதும் குற்றங் குறை காண்பதற்காக வலிந்து கொள்ளப்பட்ட முயற்சியல்ல. வலிந்து முயற்சி செய்து எழுதப்பட்டால்

அவ் எழுத்தில் ஆத்ம சுத்தம் இருக்க முடியாது என்பதைத் தரமான ரஸிகர்கள் ஆரம்பத்திலேயே புரிந்து கொள்வார்கள்.

இலங்கை ரஸிகர்கள், குறிப்பாக என்னை விரும்புபவர்கள் என்னை எந்த மாதிரிப் புரிந்து கொண்டிருந்தாலும் கூட எனது எழுத்தில் வைத்திருக்கும் உயர் கௌரவம் எனது எழுத்து நடையிலோ, பாணியிலோ, அல்லது அதன் உள்ளடக்கத்திலோ மாத்திரமல்ல, என் எழுத்தின் இதயத் தூய்மையைப் புரிந்து கொள்ளுகின்றார்கள். ஒரு எழுத்தாளனிடம் என்ன குறையும் இருக்கலாம். ஆனால் தன்னை நேசிப்பவனுடன் நடிக்கக் கூடாது.

எனவே இவ்வளவு அம்சங்களையும் கவனத்தில் கொண்டு தான் எனது எழுத்தைத் தொடருகின்றேன்.

கம்யூனிஸ்ட் கட்சியில் பேப்பர் பார்சல் கட்டுவதிலிருந்து தெருவில் அக் கட்சிப் பிரசுரங்களைக் கூவிக் கூவி விற்பது வரையில் அக் கட்சியுடன் ஆரம்பத் தொடர்பு வைத்திருந்தவர் என்கின்ற முறையில் அடி நாட்களில் அடிப்படையிலேயே கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டிருந்தவர்— கட்சியால் வளர்க்கப்பட்டவர் என்பதை நண்பர் ஜெயகாந்தனே 'துக்ளக்' என்ற சஞ்சிகையில் தானெழுதும் கட்டுரைகள் மூலம் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதைப் போன்றே நானும் மிக மிகச் சாதாரண குடும்பம் ஒன்றில் பிறந்து, சாதாரண படிப்பையே கல்வியறிவாகக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் தொழிலாளியாக ஒரு தொழிலகத்தில் தொழில் செய்துவந்த என்னை — எனது திறமைகளைக் கணக்கிலெடுத்து ஊக்கமூட்டி, உற்சாகப்படுத்தி, வளர்த்து, எழுத்தாளனாக பிரபலமடையச் செய்து— உருவாக்கிய பெருமை கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன் உருக்கு நிகர் தோழர்களையுமே சாரும். இதை நன்றியறிதலுடன் எண்ணிப் பார்க்கும் இவ்வேளையில் வருங்காலத்தில் நான் கூடப் பாதை தவறிப் போகக் கூடுமானால் என்னையும் இந்தச் சுய விமரிசனத்திற்கு இளம் தோழர்கள் உட்படுத்தவே செய்வார்கள் என்பதையும் உண்மையாக நம்புகிறேன்.

எனவேதான் வேறு எவரையும் விட எனக்கு நண்பர் ஜெயகாந்தனைப் பற்றிக் கருத்துச் சொல்ல — விமரிசிக்க — உரிமையுடன்கூடிய தனித் தகுதி உண்டு எனக் கணிக்கின்றேன்.

அதற்காக வெறும் குருட்டுத் தனமான அதிதீவிர இலக்கிய வாதம் பேசி, ஒரு படைப்பாளியை மட்டம் தட்டுவதில் எனக்கு விருப்பமில்லை; நம்பிக்கையுமில்லை. அதே சமயம் எந்தக் கொம்பனாக இருந்தாலும் அவர் பொது மக்களின் விமரிசனத்திற்கு அப்பாற்பட்டவர் என்ற பூஜா மனப்பான்மையும் எனக்கில்லை.

'கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கும்பொழுது ஒரேயடியாக ஓகோ... எனப் புகழ்வதும் கட்சியை விட்டுப் பிரிந்த பின்னர் தூற்றித் திரிவதும் தான் கம்யூனிஸ்டுகளின் போர்த் தந்திரம், பிறவிக் குணம்!' என்ற குற்றச் சாட்டும் இடைக்கிடையே கேட்காமலில்லை. இது ஓரளவு நியாயம் போலப் படலாம்.

மிகமிகச் சாதாரண பாமர மக்களிலிருந்து மிகச் சிறந்த ஆக்க சக்தி மிகுந்த கலைஞர்களை இனங்கண்டு அவர்களை உருவாக்கி மக்களுக்கு அன்னாரது திறமைகளையும் கலைத்துவத்தையும் அறிமுகப் படுத்திப் பிரபலம் பெற வைக்க முடியக் கூடிய ஒரு கட்சிக்கு,— தான் உருவாக்கி தானே வளர்த்து, தனது வர்க்க எதிரிகளை எதிர்த்துப் போராடக் கலையையும் ஒரு கருவியாக அந்த வர்க்கத்திலிருந்து உருவாகியவர்களிடமே கையளித்துள்ள—ஓர் இயக்கத்திற்கு அந்தக் கலைஞர்களை விமரிசிக்க மாத்திரம் உரிமை கிடையாது என வாதிடுவதும் ஒரு தலைப் பட்சமானது என்றே நான் கருதுகின்றேன்.

அகிலனையோ, பார்த்தசாரதியையோ, சுந்தர—ராமசாமியையோ இந்தக் கோணத்தில் நாம் விமரிசிக்க முடியாதுதான். இதில் ஓரளவு நியாயம் உண்டு.

ஆனால் 'நானொரு கம்யூனிஸ்ட்' என ஆனந்தவிகடன் பத்துக் கேள்வி'ப் பேட்டியில் சொன்னவரை, இலக்கியம் யாருக்காக என சென்னையில் ஓர் இலக்கியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோது, இலக்கியம் மக்களுக்காக—மக்களின் நல்வாழ்க்கைக்காக, என வாதிட்டு இலக்கியத்திற்குச் சமுதாயப் பணி உண்டு' எனக் கோஷமெழுப்பியவரை, இன்று இவரது கருத்தென்ன எனக் கேட்பதில் இலக்கியத்தப்பிதம் ஏதும் இருப்பதாக எனக்குப் படவில்லை.

எனக்கு ஒரு ஞாபகம் வருகின்றது. சென்னைத் தமிழ்ப் புத்தகாலயக் கட்டடத்தில் என்னை வரவேற்க ஓர் இலக்கியக் கலந்துரையாடல் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. திரு. கி. வா. ஜகந்நாதன் தலைவர். க. நா. சு, செல்லப்பா, லா. ச. ரா, பார்த்தசாரதி, வல்லிக்கண்ணன், தி. ஜானகிராமன் போன்றோரும் வந்திருந்தனர்.

நமது திரு. சோ. சிவபாதசுந்தரம் கலந்துரையாடலின் போது 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது' என்றொரு குண்டைக் கூட்டத்தில் போட்டார், அதை நான் பலமாக மறுத்தேன். 'இலங்கையில் கம்யூனிஸ்ட் எழுத்தாளர் மக்களின் அன்பைப் பெற்றவர்கள்: தரமானவர்கள்; நல்ல சிருஷ்டியாற்றல் உள்ளவர்கள். அதே சமயம் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் கட்சியைச் சேராத இன்னும் பல எழுத்தாளர்களும் அங்கம் வகிக்கிறார்கள். கட்சி எழுத்தாளர்கள் முன்னணி வகித்தாலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு அங்கமல்ல!' என மறுத்தேன்.

நண்பர் ஜெயகாந்தன் துள்ளி எழுந்தார். 'கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் ஒரு எழுத்தாளர் சங்கம் ஆரம்பிக்கக் கூடாதா, என்ன? கம்யூனிஸ்ட்டுகள் இலக்கியத் துறையில் தீண்டத் தகாதவர்களா?' என எதிர்க்கேள்வி போட்டார்

கூட்டத்தில் இதையொட்டி வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றது.

இலக்கியத் துறை சம்பந்தமாக கம்யூனிஸ்டுகள் தீண்டத் தகாதவர்கள் தானா? என்ற கேள்வியை இன்று நாமவரைப் பார்த்தே கேட்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைஏற்பட்டு விட்டது.

இதற்குக் காரணமும் உண்டு.

# ரதி வாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்

**42, 44, 46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

★ ரலி சைக்கிள் ★ சைக்கிள் உபகரணங்கள்

★ பெட்ரோமெக்ஸ் ★ நவீன அடுப்புகள்

மற்றும் சகலவிதமான சாய்ப்புச் சாமான்களும்

சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**மணிக் கூடுகள்**

**கைக் கடிகாரங்கள்**

திறம்படத் திருத்துவதிலும்

குறித்த நேரத்தில் கொடுப்பதிலும்

யாழ்ப்பாணத்தில் பிரபலம் வாய்ந்த ஸ்தாபனம்



அழகான
அட்டைப்
பெட்டிகள்





பாவனைக்கேற்ற
கைப் பைகளுக்கு

# விஜயா இண்டஸ்ரீஸ்

நேர்த்தியாக புத்தகம் கட்டுபவர்கள்.

236, பழைய சோனக தெரு, கொழும்பு.

MALLIKAI SEPTEMBER 1971

Registered as a Newspaper in Ceylon



# சோவியத் நாடு

(மாசிகை)

**சோவியத் - ஈழத்து மக்களின் மணிக்குரல்**

**சோவியத் நாடு வாசியுங்கள்**

சோவியத் நாட்டின் பல தேசிய இன மக்களின்
அரும் பெரும் சாதனைகளையும்,
விசேஷமாக மத்திய ஆசிய மக்களின்
புதிய வாழ்வையும் பற்றிக் கற்றறிய
சோவியத்நாடு வாசியுங்கள்.
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தகவல் பகுதி,

## சோவியத் ஸ்தானிகராலயம்

27, ஸர் எர்னஸ் டி சில்வா மாவத்தை,

கொழும்பு 7.

60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்தில் அச்சியற்றப்பெற்றது.